பரிசுத்த வேதாகமத்தின்

66 புத்தகங்களின் அறிமுகம்



ஆசிரியர்

D.M.D.பெஞ்சமின், M.A.,LL.M.,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பரிசுத்த வேதாகமத்தின்

66 புத்தக விளக்கவுரை

ஆசிரியர்

Bro. **D.M.D.** **பெஞ்சமின்** M.A.,LL.M.,

முதல் பதிப்பு : ஜனவரி 2014

பிரதிகள் : 1000

ஆசிரியர் : சகோ. D.M.D. பெஞ்சமின்

விலை : 100

வெளியீடு

இயேசு வாழ்வளிக்கிறார்

நாகர்கோவில் - 629 002

கன்னியாகுமரி மாவட்டம்

Ph. : 04652-279920, 279921

Fax : 04652-227498

E-mail : revdmdbenjaminjplm@yahoo.com

பரிசுத்த வேதாகமத்தின் 66 புத்தக விளக்கவுரை

பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையுள்ள புஸ்தகங்களின் அதிகாரங்கள், எழுதியவர்கள் எழுதப்பட்ட காலம், வரலாறு, வசனங்கள் போன்றவை இதில் விளக்கப் பட்டுள்ளன. வேத ஆராய்ச்சியாளர்களால் எழுதப்பட்ட பல புத்தகங்கள் இந்த புத்தகம் எழுத துணைபுரிந்திருக்கின்றன.

வேதாகமத்தை கற்பவர்களுக்கும் கற்பிக்கின்றவர்களுக்கும் எளிதில் புரியத்தக்க விதத்தில் இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சரித்திர சம்பவங்கள் (வரலாற்று நிகழ்ச்சிகள்) வேத ஆராய்ச்சியாளர்களால் எழுதப்பட்ட நூல்களிலிருந்து எடுக்கப்பட்டதால் வேதம் கற்பவர்களுக்கும் கற்பிக்கின்றவர்களுக்கும் இது பெரிதும் துணைபுரிகின்றது. பரிசுத்த வேதாகமத்தின் 66 புஸ்தகங்களின் அறிமுகம் என்ற இந்த புத்தகத்தை எழுத உதவி செய்த சர்வ வல்லவராம் தேவனுக்கும், வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்த அறிவைக் கொடுத்த வேதபண்டிதர்களுக்கும், இந்த புத்தகம் வெளிவர ஜெபித்த அனைவருக்கும் நன்றி கூறிக் கொண்டு தேவ நாம மகிமைக்கென்று இந்தப் புத்தகத்தை சமர்ப்பிக்கிறேன்.

- Bro. **D.M.D.பெஞ்சமின்** M.A.,LL.M.

உள்ளே . . .

புத்தகங்களின் மையக்கருத்துக்கள் 5

பழைய ஏற்பாடு

1. ஆகமங்கள்

1. ஆதியாகமம் 12
2. யாத்திராகமம் 14
3. லேவியராகமம் 21
4. எண்ணாகமம் 24
5. உபாகமம் 28

2. வரலாறு (சரித்திரம்)

1. யோசுவா 33
2. நியாயாதிபதிகள் 37
3. ரூத் 41
4. I சாமுவேல் 43
5. II சாமுவேல் 47
6. I இராஜாக்கள் 50
7. II இராஜாக்கள் 53
8. I நாளாகமம் 59
9. II நாளாகமம் 63
10. எஸ்றா 66
11. நெகேமியா 68
12. எஸ்தர் 70

3. பாடல்கள்:

1. யோபு 73

2. சங்கீதம் 76
3. நீதிமொழிகள் 85
4. பிரசங்கி 88
5. உன்னதப்பாட்டு 90

4. பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள் :

1. ஏசாயா 93
2. எரேமியா 98
3. புலம்பல் 103
4. எசேக்கியேல் 105
5. தானியேல் 110

5. சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள் :

1. ஓசியா 113
2. யோவேல் 116
3. ஆமோஸ் 118
4. ஒபதியா 121
5. யோனா 122
6. மீகா 124
7. நாகூம் 126
8. ஆபகூக் 128
9. செப்பனியா 130
10. ஆகாய் 132
11. சகரியா 134
12. மல்கியா 136

புதிய ஏற்பாடு

1. சுவிசேஷ புத்தகங்கள்

1. மத்தேயு 138

2. மாற்கு 146

3. லூக்கா 151

4. யோவான் 158

2. வரலாற்று புத்தகம் :

அப்போஸ்தலருடைய நடபடிகள் 163

3. நிருபங்கள் :

1. ரோமர் 168

2. I கொரிந்தியர் 171

3. II கொரிந்தியர் 174

4. கலாத்தியர் 177

5. எபேசியர் 179

6. பிலிப்பியர் 181

7. கொலோசெயர் 183

8. I தெசலோனிக்கேயர் 185

9. II தெசலோனிக்கேயர் 187

10. I தீமோத்தேயு 188

11. II தீமோத்தேயு 190

12. தீத்து 192

13. பிலேமோன் 194

14. எபிரெயர் 194

4. பொதுவான நிருபங்கள் :

1. யாக்கோபு 198

2. I பேதுரு 200

3. II பேதுரு 202

4. I யோவான் 204

5. II யோவான் 206

6. III யோவான் 207

7. யூதா 208

5. தீர்க்கதரிசன புத்தகம்

வெளிப்படுத்தின விசேஷம் 209

புத்தகங்களின் மையக்கருத்துக்கள்

பரிசுத்த வேதாகமத்தின் முக்கியக்கருத்து இயேசு கிறிஸ்துவே.

1. ஆதியாகமம் - எபிரெய ஜாதியின் ஆரம்பம்
2. யாத்திராகமம் - எபிரெய ஜாதியின் மீட்பு
3. லேவியராகமம் - ஆசாரியர்களுக்கு ஆராதனையோடு தொடர்புடைய பொறுப்புகளையும், எபிரெயருக்கு பரிசுத்த வாழ்க்கைக்கான அறிவுரைகளையும் வழங்குதல்
4. எண்ணாகமம் - வாக்குத்தத்த தேசத்தை நோக்கி வனாந்திர யாத்திரை
5. உபாகமம் - கானானில் பிரவேசிப்பதற்கான ஆயத்தம்
6. யோசுவா - கானான் ஆக்கிரமிப்பும் வெற்றியும்
7. நியாயாதிபதிகள் - தீர்ப்புகள்
8. ரூத் - தாவீது வம்சத்தின் அடித்தளம்
9. I சாமுவேல் - அரசாட்சியின் ஆரம்பம் (சவுல்)
10. II சாமுவேல் - தாவீதின் ஆட்சி
11. I இராஜாக்கள் - சாலொமோனும் அவனுக்குப் பின் வந்தவர்களும் ராஜ்யத்தைப் பிரித்தது.
12. II இராஜாக்கள் - பிரிக்கப்பட்ட தேசம்
13. I நாளாகமம் - தாவீதின் ஆட்சி
14. II நாளாகமம் - தெற்கு அரசாங்கத்தின் வரலாறு
15. எஸ்றா - பாபிலோனிலிருந்து திரும்பி வருவது
16. நெகேமியா - எருசலேம் புதுப்பிக்கப்படுதல்
17. எஸ்தர் - இஸ்ரவேலருக்கான திட்டம்
18. யோபு - துன்பங்களுக்கு மத்தியிலான விசுவாசம்
19. சங்கீதம் - இஸ்ரவேல் ஜாதியின் கீதங்கள்

20. நீதிமொழிகள் - சாலொமோனின் ஞானம்

21. பிரசங்கி - உலக வாழ்வு மாயை

22. உன்னதப்பாட்டு - உண்மையான அன்பின் (காதலின்) மேன்மை

23. ஏசாயா - மேசியாவைக் குறித்ததான மகத்தான தீர்க்கதரிசனம்

24. எரேமியா - எருசலேமின் மீட்பிற்கான கடைசி முயற்சி

25. புலம்பல் - எருசலேமின் துன்பத்தைக் கண்ட துக்கம்

26. எசேக்கியேல் - நானே தேவனென்று அவர்கள் அறிந்து கொள்வார்கள்

27. தானியேல் - பாபிலோனின் வரலாறு

28. ஓசியா - இஸ்ரவேல் பின்வாங்குதல்

29. யோவேல் - இஸ்ரவேலின் நியாயத்தீர்ப்பும், ஆசீர்வாதமும்

30. ஆமோஸ் - இஸ்ரவேலின் நியாயத்தீர்ப்பும் பாதாளமும்

31. ஒபதியா - ஏதோமின் நியாயத்தீர்ப்பு

32. யோனா - நினிவே பட்டணத்தின் நியாயத்தீர்ப்பும், மனஸ்தாபப்பட்டதும்

33. மீகா - மேசியா பிறக்குமிடம் பெத்லெகேம்

34. நாகூம் - நினிவேயில் நியாயத்தீர்ப்பு

35. ஆபகூக் - விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்

36. செப்பனியா - இஸ்ரவேலின் நியாயத்தீர்ப்பும் ஆசீர்வாதமும்

37. ஆகாய் - தேவாலயம் மீண்டும் கட்டப் படுதல்

38. சகரியா - இஸ்ரவேலின் முடிவுகாலம்

39. மல்கியா - இஸ்ரவேலுக்கான இறுதி செய்தி

40. மத்தேயு - இயேசுவே மேசியா

41. மாற்கு - இயேசுவே குமாரன் (தாசன்)

42. லூக்கா - இயேசுவே மனுஷகுமாரன்

43. யோவான் - இயேசு தேவனுடைய குமாரன்

44. அப்போஸ்தலர் - கிறிஸ்தவ சபை நிறுவப்படுதல்

45. ரோமர் - கிறிஸ்துவின் செயல்பாடுகள்

46. I கொரிந்தியர் - சபையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள்

47. II கொரிந்தியர் - கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் வசனத்திற்கும் உள்ள உறவு

48. கலாத்தியர் - நியாயப்பிரமாணத்தினாலல்ல கிருபையாலே

49. எபேசியர் - சபையின் ஒற்றுமை (ஐக்கியம்)

50. பிலிப்பியர் - சந்தோஷத்தின் ஐக்கியம்

51. கொலோசெயர் - கிறிஸ்துவின் தெய்வத்தன்மை, சபையின் மகத்துவம்

52. I தெசலோனிக்கேயர் - கர்த்தருடைய இரண்டாம் வருகை

53. II தெலோனிக்கேயர் - கர்த்தருடைய இரண்டாம் வருகை

54. I தீமோத்தேயு - சபையின் ஆட்சி ஒழுங்குகள்

55. II தீமோத்தேயு - தீமோத்தேயுவுக்கு அறிவுரைகளையும், ஊக்கத்தையும் அளித்தல்

56. தீத்து - சபை ஒழுங்குகள்

57. பிலேமோன் - ஓடிப்போன ஒருவனின் மறுவாழ்வு

58. எபிரெயர் - புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தலனும் ஆசாரியனும் இயேசு கிறிஸ்து

59. யாக்கோபு - சபையின் சட்டங்கள்

60. I பேதுரு - துன்பம் அனுபவிக்கும் சபை

61. II பேதுரு - பின்வாங்கும் நிலைமையில் சபை

62. I யோவான் - தேவனின் அன்பு

63. II யோவான் - தீமையான உபதேசம் செய்பவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்

64. III யோவான் - பரிசுத்தவான்களை உபசரியுங்கள்

65. யூதா - உங்களிடமே கவனம் தேவை

66. வெளிப்படுத்தின விசேஷம் - தேவமீட்பின் திட்டம் நிறைவு பெறுகிறது

1. ஆதியாகமம்

பரிசுத்த வேதாகமத்தில் முதலாவது காணப்படும் புத்தகம், இப்புத்தகம் பலவித படைப்புகளையும் அதன் தொடக்கங்களையும் கூறுவதும், ஆதியில் என்று பொருள்படும் பரேஷித் (BERESHITH) என்ற மூலப்பிரதியான எபிரெயமொழி வார்த்தையும் பழைய ஏற்பாட்டின் தொடக்கச்சொல்லுமே இதற்கு ஆதியாகமம் என்று பெயர் வரக்காரணம். பூமியின் தொடக்கத்தைக் குறித்து சொல்லுகின்ற ஒரே புத்தகம் ஆதியாகமம் மட்டுமே. அறிவியல் அறிஞர்களின் சிந்தைக்கு எட்டாத பல விஷயங்களை ஆவியானவர் இந்த புத்தகத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

வரலாற்றுக் காலம் : B.C. (கி.மு) 4004 - 1689 வரையிலான வரலாறு இதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆசிரியர் : (ஐந்தாகமங்களின்) எழுத்தாளராக யூத பரம்பரையும், இயேசுவும், அப்போஸ்தலர்களும், அங்கீகரிக்கும் நபர் மோசே.

எழுதப்பட்ட காலம் : B.C. 1513

பின்னணி : மத்திய கிழக்கு என்று தற்போது அழைக்கப்படும் பகுதி

முக்கிய கருத்து :

தொடக்கம், படைப்பு, மனிதனின் வீழ்ச்சி, அதிலிருந்து அவனை மீட்டெடுப்பதற்கான கடவுளின் திட்டம் போன்றவைகளே முக்கிய கருத்துக்கள்.

முக்கிய வசனம் :

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" - (ஆதி 3:15)

முக்கிய மனிதர்கள் : ஆதாம், ஏவாள், ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், சாராள், ஈசாக்கு, ரெபேக்காள், யாக்கோபு, யோசேப்பு

நூல் பகுப்பு:

I. ஆதிகாலம் : அதிகாரங்கள் 1 - 11

(i) அகிலத்தின் ஆரம்பம் : 1 : 1

(ii) படைப்பு : 1 : 2 - 2 : 3

(iii) ஏதேனில் மனிதன் : 3 : 15 - 3 : 24

(iv) ஏதேனின் வெளியே : 4 : 1 - 5 : 32

(v) ஜலப்பிரளயம் : அதிகாரங்கள் 6 - 9

(vi) பேழை செய்தல் : அதிகாரம் 6

(vii) பேழைக்குள் நுழைதல் : அதிகாரம் 7

(viii) பேழையிலிருந்து வேளியேறுதல் : அதிகாரம் 8

(ix) சட்டம் : அதிகாரம் 9

(x) பாபேல் கோபுர வேலையும் பாஷையைத் தாறுமாறாக்குதலும் : அதிகாரங்கள் 10, 11

II. கோத்திர பிதாக்களின் காலம் : 12 - 50 அதிகாரங்கள்

அ. ஆபிரகாம் 12 : 1-25 : 11

1. தேவ அழைப்பு : 12 : 1 - 20
2. லோத் : அதிகாரங்கள் 13 - 15
3. இஸ்மவேல் : அதிகாரங்கள் 16 - 17
4. சோதோம் : அதிகாரங்கள் 18 - 20
5. ஈசாக்கின் பிறப்பு : அதிகாரம் 21
6. ஈசாக்கின் பலி : அதிகாரம் 22
7. சாராளின் இறப்பு : அதிகாரம் 23
8. ஈசாக்கின் திருமணம் : அதிகாரம் 24
9. ஆபிரகாமின் மரணம் : 25 : 1 - 11

1. ஏசாவும் யாக்கோபும் : 25 : 20-26

2. கேராரில் தோல்வி : அதிகாரம் 26

3. இறுதி வருடங்கள் : அதிகாரம் 27

இ. யாக்கோபு

1. ஈசாக்குடன் : அதிகாரங்கள் 25-27

2. பதான்-அராமில் : 28 : 1 - 31 : 16

3. கானானில் : 31 : 17 - 37 : 36

4. எகிப்தில் : 42 - 50 அதிகாரங்கள்

ஈ. யோசேப்பு

1. தகப்பனாகிய யாக்கோபோடு: அதிகாரம் 37

2. எகிப்தில் : அதிகாரங்கள் 39 - 50

i. போத்திபாரின் வீட்டில் : 39 : 1 - 19

ii. சிறைச்சாலையில் : 39 : 20 - 41 : 13

iii. பார்வோன் முன்பு : 41 : 14 - 40

iv. எகிப்தின் அதிபதி : 41 : 41 - 50 : 21

v. யோசேப்பின் மரணம் : 50 : 22 - 26

சில புள்ளிவிபரங்கள்

இந்த புத்தகத்தில் 50 அதிகாரங்களும், 1533 வசனாங்களும் 1385 வரலாற்று வசனாங்களும், 148 கேள்விகளும், 146 தீர்க்க தரிசனாங்களும் அடங்கியுள்ளன. நிறைவேறிய தீர்க்கதரிசனவசனாங்கள் 123. நிறைவேறாத தீர்க்கதரிசன வசனாங்கள் 213. கட்டளைகள் 106. வாக்குத்தத்தங்கள் 71. தேவனிடமிருந்து சிறப்பு செய்திகள் 95. எச்சரிக்கைகள் 326.

2. யாத்திராகமம்

மூலபாஷையில் இந்த புத்தகம் 'பெயர்கள்' என்று அறியப்படுகிறது. செப்டுவஜின்ட் மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ள Exodus என்ற வார்த்தையின் தமிழாக்கமே யாத்திராகமம் என்பது.

எழுதப்பட்ட காலம் : கி.மு. 1480 - 1410

வரலாற்றுக்காலம்:

கிமு 1706 - 1490 வரையுள்ள 216 வருடங்களுக்கான வரலாறு இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

பின்னணி:

எகிப்தில் ஒருகாலத்தில் நற்சூழ்நிலையில் வாழ்ந்த மக்கள் தாங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைகிற சூழ்நிலை

ஆசிரியர் : மோசே

எழுதப்பட்ட இடம் :

இஸ்ரவேலரின் வனாந்தர பயணத்தின் இடையில் சீனாய் சமவெளியில் வைத்து எழுதப்பட்டது.

மையக்கருத்து :

இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து மீட்பது என்பதே இந்த புத்தகத்தின் மையக்கருத்து.

நூல் சிறப்பு :

பழைய ஏற்பாட்டின் மற்றெல்லா புத்தகங்களையும் விட அதிக அற்புதங்கள் எழுதப்பட்டுள்ள புத்தகம். பத்து கட்டளைகளும் இப்புத்தகத்தில்தான் இடம்பெற்றுள்ளன.

முக்கிய வசனம் :

"நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்கு அடையாளமாய் இருக்கும். அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்து போவேன். நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்". (யாத். 12:13)

முக்கிய மனிதர்கள் :

மோசே, மிரியாம், பார்வோனின் குமாரத்தி, எத்திரோ, ஆரோன், யோசுவா, பெசலெயேல், அகோலியாப்

முக்கிய இடங்கள் :

எகிப்து, கோசேன், நைல்நதி, மீதியான், செங்கடல், சீனாய் சமவெளி, சீனாய் மலை

நூல் பகுப்பு:

I. மீட்பரான மோசே : 1 - 4 : 31

1. எகிப்தின் அடிமைத்தனம் 1 : 1 - 22

2. மோசேயின் பிறப்பு, வெளியேற்றம் 2 : 1-25

3. கர்த்தர் மோசேயை அழைத்தல் 3 : 1-22

4. மோசேயை பலப்படுத்துதல் ஆரோனை நியமித்தல் எகிப்திற்கு பயணித்தல் 4 : 1-31

II. பார்வோனுடன் நடந்த மோதல் : 5 : 1 - 13 : 16

1. மோசேயும் கர்த்தரும், பார்வோனின் பழிவாங்குதல் 5 : 1-23

2. மோசேயை தைரியப்படுத்துதல், வம்ச வரலாறு 6 : 1-30

3. மோசே பார்வோனின் முன்பாக 7 : 1-24

4. வாதைகளின் ஆரம்பம் 7:20 - 12:51

(i) தண்ணீர் இரத்தமாகுதல் 7 : 20 - 25

(ii) தவளைகள் 8 : 1 - 14

(iii) பேன்கள் 8 : 1-32

(iv) வண்டுகள் 8 : 20 - 32

(v) கொள்ளைநோய் 9 : 1 - 7

(vi) கொப்புளங்கள் 9 : 8 - 12

(vii) கல்மழை 9 : 13 - 35

(viii) வெட்டுக்கிளிகள் 10 : 1 - 20

(ix) தடவிக்கொண்டிருக்கத்தக்க இருள் 10 : 21 - 29

(x) தலைப்பிள்ளைச் சங்காரம் 11 : 1 - 12 : 51

5. பஸ்காவின் ஆரம்பம் 12 : 1 - 51

(i) புளிப்பில்லா அப்பம்

(ii) முதல் பஸ்கா

(iii) பஸ்காவின் (சட்ட) ஒழுங்குகள்

6. முதற்பேறு கர்த்தருக்கு 13 : 1-16

III. எகிப்து முதல் சீனாய் வரை : 13 : 17 - 19 : 2

1. மேகஸ்தம்பமும் அக்கினிஸ்தம்பமும் 13 : 17-22

2. இஸ்ரவேலரின் செங்கடல் பயணம் 14 : 1-31

(i) மோசே கர்த்தரை நோக்கி அழுதல்

(ii) பார்வோனின் அழிவு

(iii) ஜனங்கள் கர்த்தர்மீதும் மோசேமீதும் நம்பிக்கை கொள்ளுதல்

3. மோசேயின் சங்கீதம் 15 : 1-21

4. மாராவின் தண்ணீர் மதுரமாகுதல் 15 : 22-27

5. மன்னாவும் காடையும் 16 : 1-36

6. கன்மலையிலிருந்து நீர் 17 : 1-6

7. அமலேக்கியருடன் யுத்தம் 17 : 7-16

8. மோசேயும் மாமனார் எத்திரோவும் 18 : 1-27

(i) நியாயம் விசாரிப்பவர்களை நியமித்தல்

(ii) மாமனார் திரும்பிச் செல்லுதல்

8. சீனாய் வனாந்திரத்தில் இஸ்ரவேலர் வந்து சேருதல் 19 : 1-2

IV. உடன்படிக்கை நிறுவப்படுதல் 19 : 3 - 24 : 18

1. சீனாய் உடன்படிக்கை, 19 : 3-25
கர்த்தர் சீனாய் மலையில்,
சீனாய் மலையின் சுத்திகரிப்பு

2. பத்துக்கட்டளைகள்
தேவசத்தத்தால் ஜனங்கள் பயப்படுதல் 20 : 1-26
மண்ணாலான பலிபீடம் பலி பொருட்கள்

3. அடிமைகளைக் குறித்த சட்டங்கள் 21 : 1-36
வன்முறைக்கான தண்டனை
4. நஷ்டப்பரிகாரங்கள், 22 : 1-31
கர்த்தரை நிந்திக்கக்கூடாது,
காணிக்கை கொடுக்க தாமதிக்கக்கூடாது,
ஆண்களில் முதற்பேறு கர்த்தருக்கு,
நீங்கள் கர்த்தருடைய பரிசுத்த ஜனம்
5. நீதி நிர்வாகம், 23 : 1-33
செல்வத்தின் வருடம்,
விழாக்கள் (பண்டிகை),
வாக்குத்தத்தங்கள்
6. கர்த்தரின் உடன்படிக்கை, 24 : 1-18
மலையின் மேலேறிய 70 பேர்,
கர்த்தரைக் கண்டு புசித்து குடித்தவர்கள்,
கர்த்தர் மேகத்தினிடையே மோசேயை
அழைத்தல்,
மோசே மேகத்திற்குள்ளாக நடந்து மலையின்
மேலேறுதல்

V. தேவ ஆராதனைக்கு ஆசரிப்பு கூடாரம் 25 : 1 - 40 : 38

1. ஆசரிப்புக்கூடாரவேலைக்கான 25 : 1-40
நன்கொடை,
காணிக்கைப் பெட்டி,
சமூகத்தப்பமேசை,
குத்துவிளக்குகள்,
காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே
செய்ய எச்சரிக்கை
2. ஆசரிப்பு கூடாரவேலையும் பொருட்களும் 26 : 1-37

3. பலிபீடம்.   27 : 1-21

பிரகாரம்

4 ஆசாரியனுக்கு பரிசுத்த வஸ்திரங்கள்:   28 : 1-46

மார்ப்பதக்கம்.

ஏபோத்.

அங்கி.

விசித்திரமான உள்சட்டை.

பாகை. இடைக்கச்சை

ஊரீம்-தும்மீம்

5. ஆசாரியனாக அபிஷேகம்   29 : 1-46

செய்வதற்கான முறை

அனுதின (அன்றாட) பலிகள்

6. தூபங்காட்டுகிறதற்கு தூபபீடம்   30 : 1-38

7. வேலையாட்கள்.   31 : 1-18

வேலை பொருட்கள்.

ஓய்வுநாள் ஆசரிப்பு.

தேவனுடைய விரலினால். எழுதப்பட்ட கட்டளைகள்

8. தங்கத்தாலான காளைக் கன்றுக்குட்டி   32 : 1-35

மோசே மலையிலிருந்து வருதல்

ஜனங்கள் காளைக்குட்டியை ஆராதித்தல்

ஆரோன் ஜனங்களை விட்டுவிடுதல்

கட்டளைகளை மோசே உடைத்தல்

9. சீனாய் மலையிலிருந்து பயணம்   33 : 1-23

ஆரம்பித்தல்

ஆசாரிப்புக் கூடாரம்

கர்த்தர் ஜனத்தோடு வருதல்

10. மீண்டும் கட்டளைகள் எழுதப்படுதல் 34 : 1-35
புளிப்பி[illegible]ப்பப் பண்டிகை,
மோசேயின் முகத்திலுள்ள ஒளி

11. ஓய்வுநாளைக் கடைபிடித்தல் 35 : 1-35
ஆசரிப்புக் கூடார வேலைக்கு
காணிக்கைகளை செலுத்துதல்,
கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேலையாட்கள்

12. பரிசுத்த கூடார வேலை 36 : 1-38

13. சாட்சி பெட்டி, 37 : 1-29
காணிக்கை அப்ப மேசை,
குத்துவிளக்குகள், தூபபீடம்,
தைலங்கள்

14. தகன பலிகள், 38 : 1-31
பிரகாரம்,
பயன்படுத்த வேண்டிய உலோகங்கள்

15. ஆசாரிய பரிசுத்த வஸ்திரங்கள் செய்தல், 39 : 1-43
மோசே வேலையாட்களை ,
ஆசீர்வதித்தல்

16. ஆசரிப்புக் கூடார பிரதிஷ்டை, 40 : 1-38
கர்த்தருக்குக் கீழ்ப்படிதல்,
கர்த்தரின் பிரசன்னம்

இந்த ஆசரிப்புக்கூடாரம் தாவீது ராஜாவின் காலம் வரை நிலைத்து நின்றது.

சில புள்ளி விபரங்கள்:

இதில் 40 அதிகாரங்களும் 1213 வசனங்களும் உள்ளது. வரலாற்றுத் தொடர்புடைய வசனங்கள் 1089, நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 129, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 2, கேள்விகள் 58, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 73, கட்டளைகள் 827, அறிக்கைகள் 240, வாக்குத்தத்தங்கள் 28, மோசேயின் அற்புதங்கள் 42.

3. லேவியராகமம்

"லேவி" அவன் அழைத்தான் என்று அர்த்தம். கர்த்தர் பரிசுத்தராக இருப்பதால் கர்த்தருடைய ஜனங்களும் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். பலிகள், சம்பிரதாயங்கள், காணிக்கைகள் போன்றவற்றால் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளலாம் என்று இந்த புத்தகம் எடுத்துரைக்கின்றது. பரிசுத்தம் - அசுத்தம் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பலிகளிலும் ஆராதனைகளிலும் லேவியர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் லேவியரைக்குறித்து அதிகமாக இந்த புத்தகம் விளக்குகிறது.

பின்னணி : சீனாய் மலையின் அடிவாரமும், இஸ்ரவேலர் எவ்வாறு பரிசுத்த மக்களாக வாழவேண்டும் என தேவன் கற்பிக்கிற சூழ்நிலையுமே இப்புத்தகத்தின் பின்னணி.

ஆசிரியர் : மோசே

மையப்பொருள் : பரிசுத்தம்

எழுதப்பட்ட காலம் : கி.மு. 1446 - 1445

முக்கிய வசனம் :

"நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால் உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (லேவி 19:2)

முக்கிய மனிதர்கள் : மோசே, ஆரோன், நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார்

முக்கிய இடம் : சீனாய் மலை

நூல் பகுப்பு :

I. **பல சட்டங்களின் விளக்கம் : அதிகாரங்கள் 1-17**

அ. ப□கள் :

1. சர்வாங்க தகனபலி	1 : 1-17
2. போஜன பலி	2 : 1-16
3. சமாதான பலி	3 : 1-17

4. பாவநிவாரண பலி 4 : 1-35

5. குற்றநிவாரண பலி 5 : 1-19

ஆ. ப□களுக்குரிய பிரமாணங்கள் : அதிகாரங்கள் 6-7

1. சர்வாங்க தகன பலிக்குரிய பிரமாணம் 6 : 1-13

2. போஜன பலியின் பிரமாணம் 6 : 14-18

3. பாவநிவாரண பலியின் பிரமாணம் 6 : 19-30

4. குற்றநிவாரண பலியின் பிரமாணம் 7 : 1-10

5. சமாதான பலியின் பிரமாணம் 7 : 11-21

இ. ஆசாரிய அபிஷேகமும், பிரமாணங்களும் அதிகாரங்கள் 8-10

1. ஆசாரிய அபிஷேகம் 8 : 1-36

2. ஆசாரிய ஊழியம் குறித்து 9 : 1-24

3. நாதாபும் அபியூவும் பட்சிக்கப் படுதலும் ஆசாரியனின் சட்டங்களும் 10 : 1-20

ஈ. சுத்திகரிப்பின் பிரமாணங்கள்: அதிகாரங்கள் 11-17

1. சுத்தமும் அசுத்தமுமான உயிரினங்கள் 11 : 1-47

2. குழந்தைப்பெற்ற பெண்ணின் சுத்திகரிப்பு 12 : 1-8

3. குஷ்டரோகம், 13 : 1-59
குஷ்டரோக சுத்திகரிப்பு 14 : 1-57

4. உதிரப்போக்கு மூலமாக அசுத்தம், 15 : 1-33
பாவ நிவாரண தினம் 16 : 1-34

5. இரத்த சுத்திகரிப்பு 17 : 1-16

II. பரிசுத்தத்திற்காகக் கடைபிடிக்க வேண்டிய கட்டளைகள் அதிகாரங்கள் 18-22

1. உடலுறவுக்கான சுத்திகரிப்பு 18 : 1-30

2. பலவிதமான தண்டனைகள் 20 : 1-27

3. ஆசாரிய பரிசுத்தம் 21 : 1-24

4. பலி பொருட்களைப் புசித்தல் 22 : 1-33

III. ஆசரிக்க வேண்டிய நாட்கள் : அதிகாரங்கள் 23-27

அ. வாரந்தோறும் ஆசரிக்க வேண்டிய நாள்

1. ஓய்வுநாள் 23 : 1-3

ஆ. வருடந்தோறும் ஆசரிக்க வேண்டிய நாட்கள்

1. பஸ்கா பண்டிகை 23 : 4,5

2. புளிப்பில்லா அப்ப பண்டிகை 23 : 6-8

3. முதற்பலன் பண்டிகை 23 : 9-22

4. புதுவருட பண்டிகை (எக்காளப் பண்டிகை) 23 : 23-25

6. பாவநிவாரண நாள் 23 : 26-32

7. கூடாரப் பண்டிகை 23 : 33-44

தேவனைத் தூற்றினால் தண்டனை

பழிவாங்குதல் சட்டம் 24 : 1-23

8. யூபிலி வருடம் 25 : 1-55

பலவிதமான ஆசீர்வாதங்கள், 26 : 1-46
தண்டனைகள், சாபங்கள்

காணிக்கைகள், தசமபாகங்கள் 27 : 1-34

சில புள்ளி விவரங்கள்:

இந்த புத்தகத்தில் 27 அதிகாரங்களும் 859 வசனங்களும் இருக்கிறது. கேள்விகள் 3, நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 58, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 6, வரலாற்று வசனங்கள் 799, கட்டளைகள் 795, வாக்குத்தத்தங்கள் 26, தேவனிடமிருந்து சிறப்பு செய்திகள் 35, எச்சரிக்கைகள் 125.

4. எண்ணாகமம்

எபிரெய மொழியில் இந்த புத்தகத்திற்கு "பாலைவனத்தில்" என்று பெயர். சீனாய் மலையிலிருந்து புறப்பட்ட மக்கள் அங்கிருந்து வாக்குத்தத்த தேசத்தின் எல்லையான மோவாப் பள்ளத்தாக்கில் சேர்ந்தது வரை உள்ள 40 வருட சரித்திரமானது (கி.மு.1490 - 1450) இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. 1 முதல் 26 அதிகாரங்களில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. இஸ்ரவேலில் யுத்தத்திற்குத் தகுதியான ஆண்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்கவே இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பு. எனவே தான் இது எண்ணாகமம் எனப் பெயர் பெற்றது.

ஆசிரியர் : மோசே

எழுதப்பட்ட காலம் : கி.மு. 1450 - 1410

பின்னணி : சீனாய் பகுதியின் பெருமணல்காடு, கானானுக்கு சற்று தெற்கும் கிழக்குமுள்ள பகுதிகள்

முக்கிய வசனங்கள்:

"என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும், என் சத்தத்துக்குச் செவிகொடாமல் இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சைபார்த்த மனிதரில் ஒருவரும்

அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்". எண் 14 : 22,23

முக்கிய மனிதர்கள் : மோசே, ஆரோன், மிரியாம், யோசுவா, காலேப், எலெயாசர், கோராகு, பிலேயாம்

முக்கிய இடங்கள் : சீனாய் மலை, கானான் தேசம், காதேஸ், பர்னேயா, ஓரேப் மலை, மோவாப் சமவெளி

முக்கிய கருத்து : இஸ்ரவேல் மக்களின் 40 வருட பாலைவனப் பயணம்

நூல் பகுப்பு:

I. பயணத்திற்கான ஆயத்தமும், பயணத் தொடக்கமும் :

அதிகாரங்கள் 1-13

1. மக்கள்தொகை கணக்கெடுப்பும் கோத்திரத்தலைவர்களும் - 1 : 1-54
2. பாளையவரிசை - 2 : 1-34
3. லேவியரும் பொறுப்புகளும் - 3 : 1-51
4. கோகாத்தியரின் கடமைகள் - 4 : 1-49
   1. கெர்சோனியரின் கடமைகள்
   2. மெராரியரின் கடமைகள்
   3. லேவியர்களின் எண்ணிக்கை
5. பாளைய சுத்திகரிப்பு - 5 : 1-31
   1. கஷ்ட பரிகாரம்
   2. சந்தேகம்
6. நசரேய விரதம், ஆசீர்வாதம் - 6 : 1-26
7. கோத்திரப்பிதாக்களின் வழிபாடு - 7 : 1-89
8. விளக்கு கொழுத்தும் ஒழுங்கு, லேவியரின் அர்ப்பணம் - 9 : 1-23
9. இரண்டாவது பஸ்கா, கூடாரங்கள் மேல் மேகம் - 9 : 1-23
10. வெள்ளி எக்காளங்கள், சீனாய் மலையிலிருந்து புறப்படுதல் - 10 : 1-36
11. தபேராவில் கர்த்தருடைய தீ, இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்பு 70 தலைவர்கள், காடைகளும், வாதையும் - 11 : 1-35
12. மிரியாம், ஆரோனின் முறுமுறுப்பு - 12 : 1-16
13. கானான் தேசத்தை உளவு பார்த்தல், வேவுக்காரர்களின் செய்தி - 13 : 1-33

II. அவிசுவாசத்தால் அலைந்து திரியும் நிலை : அதிகாரங்கள் 14-25

14. இஸ்ரவேலரின் அவிசுவாசம் - 14 : 1-45

15. பலவிதமான வழிபாடுகள், செல்வங்களை அர்ப்பணித்தல் - 15 : 1-4

16. கோராகு, தாத்தான், அபிராம் போட்டி - 16 : 1-50

17. ஆரோனின் கோல் துளிர்க்கும் - 17 : 1-13

18. ஆசாரியர்கள், லேவியர்கள் மற்றும் அவர்கள் கடமைகள் - 18 : 1-32

19. சிவப்பான கிடாரி பலி, சுத்திகரிக்கப்பட்ட நீர் - 19 : 1-22

20. மிரியாமின் இறப்பு மோசே பாறையை அடித்தல், ஏதோமின் பாவம், ஆரோனின் மரணம் - 20 : 1-29

21. வெண்கல சர்ப்பம், அமோரிய ராஜாக்களின் தோல்வி - 21 : 1-35

22. இஸ்ரவேல், கானான் எல்லையில் பாலாக், பிலேயாமும், பிலேயாமின் கழுதை - 22 : 1-11

23. பிலேயாமின் தீர்க்கதரிசனங்கள் - 23 : 1-36

24. பிலேயாமின் ஆசீர்வாத வசனங்கள் - 24 : 1-25

25. பாகால் பேயோர் - 25 : 1-18

III. கானானைக் கைப்பற்ற புதிய தலைமுறையினரை ஆயத்தமாக்குதல்: அதிகாரங்கள் 26-36

26. இரண்டாம் மக்கள் தொகை கணக்கெடுப்பு - 26 : 1-65

27. பெண்பிள்ளைகளின் உரிமை, மோசேயின் பிறகு யோசுவா, மோசே மரணத்திற்கு ஆயத்தமாகுதல்	-	27 : 1-23
28. பலிகளும் வரிசைகளும்	-	28 : 1-31
29. பண்டிகைகளும் பொருத்தனைகளும்	-	29 : 1-40
30. பொருத்தனைகளின் ஒழுங்குகள்	-	30 : 1-16
31. மீதியானியர்களின் அழிவு, கொள்ளைப்பொருளைப் பங்கிடுதல், இறுதி எச்சரிப்பு	-	31 : 1-54
32. யோர்தானுக்குக் கிழக்கான கோத்திரங்கள், மோசேயின் சங்கீதம்	-	32 : 1-42
33. மறைவிடங்களும் ஆசீர்வாதமும்	-	33 : 1-56
34. கானான் தேசமும் எல்லையும், மோசேயின் மரணம், மோசேக்குப் பதில் யோசுவா	-	34 : 1-29
35. லேவியர்களின் பட்டணங்கள், குடியிருப்பு நகரங்கள்	-	35 : 1-34
36. திருமணமான பெண்ணின் உரிமைகள்	-	36 : 1-13

சில புள்ளி விவரங்கள்:

இந்த புத்தகத்தில் 36 அதிகாரங்களும் 1288 வசனங்களும் உள்ளன. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 42, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 15, கேள்விகள் 59, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 72, கட்டளைகள் 554, வாக்குத்தத்தங்கள் 5, எச்சரிக்கைகள் 79.

5. உபாகமம்

இது மோசேயின் ஐந்தாவது புத்தகம். நியாயப்பிராமணத்தின் நகல் என்று பொருள் படக்கூடிய வார்த்தை உபாகமத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த பெயருக்கும் இந்த புத்தகத்திலுள்ள கருத்துக்கும் எந்த சம்பந்தமுமில்லை. சில பகுதிகளில் மட்டுமே நியாயப்பிரமாணத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வரலாற்று நிகழ்ச்சிகளும், சீனாய் உடன்படிக்கை கட்டளைகளின் விளக்கமும் நியாயப் பிரமாணங்களுக்கான புதிய விளக்கங்களும் பெருமளவில் இடம் பெற்றுள்ளன. இயேசு அடிக்கடி இந்நூலிலிருந்து மேற்கோள்களை சாத்தானோடு போராடும் போதும், விவாகரத்து பற்றி பேசும் போதும் பயன்படுத்தி உள்ளார்.

கர்த்தரோடு உடன்படிக்கை செய்துகொண்ட ஜனம் நியாயப் பிரமாண ஒழுங்குகளுக்கு ஏற்ப வாழவில்லை. ஒரே தேவன், ஒரே ஜனம், ஒரே பூமி, ஒரே ஆராதனை இடம் என்ற ஒற்றுமையுடன் வாழ அழைக்கப்பட்ட ஜனங்கள் கி.மு. 931-ல் இரண்டு பிரிவுகளாக மாறினார்கள். கலகங்கள், விக்கிரக ஆராதனைகள் போன்றவற்றால் கர்த்தர் அவர்களைச் சிறிது காலம் கைவிட்டு துன்பத்தின் பாதையில் அவர்களை நடத்தினார். சட்டங்கள் மீறிய இஸ்ரவேல் மக்களுக்கு மோசே கொடுத்த இறுதி எச்சரிக்கையாக இந்த புத்தகம் உள்ளது.

ஆசிரியர் : மோசே (மோசேயின் மரணத்திற்குப் பின்னான பகுதிகளை யோசுவா எழுதியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

எழுதப்பட்ட காலம் : கி.மு. 1406

பின்னணி : யோர்தான் நதியின் கிழக்கு ஓரப்பகுதி

முக்கிய வசனம் :

"ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்றும்,

தம்மைப் பகைக்கிறவர்களுக்குப் பிரத்தியட்சமாய்ப் பதிலளித்து அவர்களை அழிப்பார் என்றும், தம்மைப் பகைக்கிறவனுக்கு அவர் தாமதியாமல் பிரத்தியட்சமாய்ப் பதிலளிப்பார் என்றும் நீ அறியக்கடவாய்"

(உபா 7:9,10)

முக்கிய மனிதர்கள் : மோசே, யோசுவா

முக்கிய இடங்கள் : மோவாப் தேசத்திலுள்ள அராபா சமவெளி

நூல் பகுப்பு :

I. தேவன் தம் மக்களுக்குச் செய்த காரியங்கள் : 1-4:43

1. கட்டளைகளின் விளக்கங்கள்
   நியாயாதிபதிகளை நியமித்தல் - 1 : 1-46
   கானானை உளவு பார்த்தல்
   அவிசுவாசம்

2. காதேசிலிருந்து புறப்படுதல்
   சீகோன் தேசத்தைக் கைப்பற்றுதல் - 2 : 1-37

3. ஓகைக் கைப்பற்றுதல்
   யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள கோத்திரம் - 3 : 1-29
   மோசே கானானுக்குள் பிரவேசிக்கவில்லை

4. மோசேயின் இரண்டாவது பிரசங்கம்
   நியாயப்பிரமாணத்தைத் திரும்பச் சொல்லுதல்- 4 : 1-49
   பலவித முன்னறிவிப்புகளும், போதனைகளும்

II. தேவன் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் காரியங்கள்: அதிகாரங்கள்: 27-33

5. ஓரேபின் உடன்படிக்கை
   பத்துக்கட்டளைகள் - 5 : 1-33
   மோசே வழியான கட்டளைகள்

6. முக்கிய கட்டளை - 6 : 1-25

7. இஸ்ரவேலும் மற்ற ஜனங்களும் - 7 : 1-36

8. சோதனைகள் - 8 : 1-20

9. வெற்றி கர்த்தரின் கொடை,
ஒரேப்பில் விசுவாச தியாகம் - 9 : 1-29

10. மீண்டும் உடன்படிக்கை பலகை,
கீழ்ப்படிதல் தேவை - 10 : 1-22

11. கர்த்தரின் வல்லமை,
ஆசீர்வாதமும் சாபமும் - 11 : 1-32

12. ஆசீர்வாதத்தின் வாசல்கள்,
ஆராதிக்கும் இடம் - 12 : 1-31

13. விக்கிரகாராதனைக்கான தண்டனை,
கள்ள தீர்க்கதரிசிகள் - 13 : 1-19

14. புலம்பல் முறை - 14 : 1-29

15. ஓய்வு நாள்,
அடிமைகளுக்கு விடுதலை, - 15 : 1-23
தலையீற்றைக் குறித்து

16. பஸ்கா பண்டிகை,
வாரப் பண்டிகை, - 16 : 1-22
கூடாரப் பண்டிகை,
நீதி கடைபிடித்தல்

17. விக்கிரக ஆராதனையை ஒழிக்க வேண்டும்,
அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல், - 17 : 1-20
ராஜாவைக் குறித்த அறிவிப்பு

18. ஆசாரியர்கள், லேவியர்களின் பங்கு,
விக்கிரகாராதனை கூடாது, - 18 : 1-22
மோசேயைப்போல் ஒரு தீர்க்கதரிசி

19. ஒளிப்பிடங்கள் (மறைவிடங்கள்),
சாட்சிகள் - 19 : 1-20

20. போர்ச்சட்டங்கள்,
பலவித சட்டங்கள் - 20 : 1-20

21. கொலைக்காரனை அறிய முடியாதபோது
போர்க் கைதிகள் - 21 : 1-22
முதற்பேறானவனின் உரிமை
அடங்காத பிள்ளை

22. சட்டங்கள்,
தாம்பத்ய விசுவாசம் - 22 : 1-30

23. சபைக்கு உட்படாதவன்,
பாளைய சுத்தம், - 23 : 1-25
பலவித சட்டங்கள்

24. திருமண முறிவு,
பலவித சட்டங்கள் - 24 : 1-21

25. போரடிக்கிற மாட்டை வாய் கட்டக்கூடாது,
புருஷனின் சகோதரன்,
புருஷன் இறந்தால் மறுமணம், - 25 : 1-19
பலவித சட்டங்கள்

26. முதற்பலன்,
பரிசுத்த ஜனம் - 26 : 1-19

III. எதிர்காலத்தில் தேவன் செய்ய விரும்பியதை மோசே உரைத்தலும், மோசேயும் மரணமும் அதிகாரங்கள்: 27-34

27. சட்டங்கள் குறிப்பிடப்படுகிறது,
பன்னிரண்டு சாபங்கள் - 27 : 1-26

28. ஆசீர்வாதங்கள்
கீழ்ப்படியாமைக்கான தண்டனை - 28 : 1-69

29. பெலிஸ்திய உடன்படிக்கை - 29 : 1-28

30. ஜீவனையும் மரணத்தையும் தேர்ந்தெடுப்பது - 30 : 1-20

31. மோசேயின் அடுத்த தலைவர் யோசுவா,
நியமங்களைக் கடைபிடிப்பது, - 31 : 1-30

மோசேக்கு இறுதி எச்சரிக்கை

32. மோசேயின் சங்கீதம், - 32 : 1-44
மோசேயின் இறுதி உபதேசம் - 32 : 45-52

33. மோசேயின் ஆசீர்வாதம் - 33 : 1-29

34. மோசேயின் மரணம் - 34 : 1-12

சில புள்ளிவிபரங்கள்:

இந்த புத்தகத்தில் 34 அதிகாரங்களும், 959 வசனங்களும் உள்ளன. வரலாற்று வசனங்கள் 690, நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 230, நிறைவேறாத தீர்க்க தரிசனங்கள் 37, கேள்விகள் 33, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 33, கட்டளைகள் 519, வாக்குத்தத்தங்கள் 47, எச்சரிக்கைகள் 497.

6. யோசுவா

வாக்குத்தத்த தேசத்திற்குள் நுழைவதற்கான அனுமதி மோசேக்குக் கிடைக்கவில்லை. மோசேக்கு அடுத்தபடியாக கர்த்தர் யோசுவாவைத் தெரிந்து கொண்டார். இரண்டு முக்கிய பொறுப்புகள் யோசுவாவிற்குக் கொடுக்கப்பட்டது. 1. கானான் தேசத்தைக் கைப்பற்றுதல் 2. அதை இஸ்ரவேல் மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்தல். கர்த்தரால் நியமிக்கப் பட்ட யோசுவாவின் பெயரே இந்தப் புத்தகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

கி.மு. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இஸ்ரவேல் மக்கள் கானானுக்குள் பிரவேசித்தார்கள் என்ற பொதுவான கருத்து நிலவுகிறது.

ஆசிரியர் :

ஆசிரியரைக் குறித்து தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும், இதை யோசுவா தான் எழுதியிருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. இதில் கடைசி சில வசனங்கள் (24 : 19-33) அவருடனிருந்த பினெகாஸ் எழுதியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

வரலாற்று காலம் :

கி.மு. 1451-1425 வரையிலான 26 வருட நிகழ்ச்சிகள் இதில் இடம் பெற்றுள்ளன.

புவியியல் பின்னணி : யோர்தான் நதி, கானான் தேசம், 12 கோத்திரங்களின் குடியேற்ற பகுதிகள்

பின்னணி : வாக்குத்தத்த நாடாகிய கானான் தேசம்

முக்கிய வசனம் : "நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்கு கொடுத்தேன்". யோசுவா 1:3

முக்கிய மனிதர்கள் : யோசுவா, ராகாப், ஆசான், பினெகாஸ், எலெயாசார்

முக்கிய இடங்கள் : எரிகோ, ஆயீ, ஏபால் மலை, கிபியோன், கில்கால், சீகேம்

மையக் கருத்து :

யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேல் மக்கள்

கானானுக்குள் பிரவேசித்தார்கள். அங்குள்ள அரசர்களைத் தோற்கடித்து கானான் தேசத்தைக் கைப்பற்றினார்கள் என்பதே இதன் மையக் கருத்து.

நூல் பகுப்பு :

I. வாக்குத்தத்த நாட்டை வெற்றி கொள்ளுதல் : 1:1 - 13:7

1. கானானுக்குள் பிரவேசிப்பதற்கான ஆயத்தம் - 1 : 1-18
2. எரிகோவில் வேவுக்காரர்கள், ராகாப்பும் வேவுக்காரர்களும் - 2 : 1-24
3. இஸ்ரவேல் யோர்தானைக் கடந்தார்கள் - 3 : 1-17
4. இரண்டு அடையாளங்கள், - 4 : 1-18
   கில்காலில் வைத்து விருத்தசேதனம் - 4:19 - 5:10
5. இஸ்ரவேலர் கில்காலில், - 5 : 1-12
   கர்த்தரின் படைத்தளபதி - 5 : 13-15
6. எரிகோ மதில் இடிந்து விழுதல் - 6 : 1-27
7. ஆகானின் பாவம் - 7 : 1-26
8. ஆயி பட்டணம் பிடிக்கப்படுதல், - 8 : 1-29
   நியாயப்பிரமாணத்தை வாசித்தல் - 8 : 30-35
9. கிபியோனியருடன் உடன்படிக்கை - 9 : 1-27
10. கிபியோனியரின் வெற்றி, - 10 : 1-27
    மக்கெதாவைக் கைப்பற்றுதல் - 10 : 28-43
11. யாபீனும் கூட்டாளிகளும் - 11 : 1-23
12. யோசுவா தோற்கடித்த கனானிய ராஜாக்கள் - 12 : 1-23

II. வாக்குத்தத்த நாட்டை பங்கிட்டுக் கோத்திரங்களை குடியேற்றுவித்தல் 13:1 - 24:33

13. தேசத்தைப் பங்கிட கர்த்தரின் கட்டளை, - 13 : 1-7
    தேசத்தைப் பிரித்தல்

யோர்தானுக்குக் கிழக்கில்	- 13 : 8-23
காத்தின் பங்கு	- 13 : 24-28
மனாசேயின் பங்கு	- 13 : 29-33
14. யோர்தானின் மேற்கே	
காலேபின் பங்கு	- 14 : 1-15
15. யூதாவின் பங்கு	- 15 : 1-63
16. எப்பிராயீமின் பங்கு	- 16 : 1-10
17. மனாசேயின் பங்கு	- 17 : 1-18
18. ஆசரிப்புக்கூடாரம் நிறுவப்பட்டது	- 18 : 1
ஏழு கோத்திரங்களின் உரிமைகள்	- 18 : 2-19
பென்யமீன் கோத்திரம்	- 18 : 19-28
19. சிமியோன்	- 19 : 1-9
செபுலோன்	- 19 : 10-16
இசக்கார்	- 19 : 17-23
ஆசேர்	- 19 : 24-31
நப்தலி	- 19 : 32-39
தாண்	- 19 : 40-51
20. மறைவிட நகரங்கள் :	
கேதேஸ், சீகேம், பேசேர், எபிரோன்,	
ராமோத், கோலான்	- 20 : 1-9
21. லேவியர்களின் உரிமைகள்	- 21 : 1-45
22. இரண்டரை கோத்திரத்தார் திரும்பி போகுதலும்,	
அவர்கள் கட்டிய பலிபீடமும்	- 22 : 1-34
23. யோசுவாவின் போதனை	- 23 : 1-14
கர்த்தருக்குக் கீழ்ப்படியாவிட்டால்	- 23 : 14-16
24. யோசுவாவின் இறுதி அறிவுரை	- 24 : 1-28

யோசுவாவின் மரணமும் அடக்கமும் - 24 : 29-31

யோசேப்பின் எலும்புகளை அடக்கம் பண்ணுதல் - 24 : 32

எலெயாசரின் மரணம் - 24 : 33

சில புள்ளிவிபரங்கள்:

இந்த புத்தகத்தில் 24 அதிகாரங்களும், 658 வசனங்களும் உண்டு. வரலாற்றுத் தொடர்புடைய வசனங்கள் 624, நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 42. கேள்விகள் 21, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 14, கட்டளைகள் 98, வாக்குத்தத்தங்கள் 15, எச்சரிக்கைகள் 44.

7. நியாயாதிபதிகள்

யோசுவாவின் காலத்திற்குப் பிறகு சவுலின் காலம் வரை இஸ்ரவேலரை சத்துருவின் கையிலிருந்து பாதுகாக்க கர்த்தரால் நியமிக்கப்பட்ட போர்வீரர்களே நியாயாதிபதிகளாவார்கள்.

ஒத்னியேல், ஏகூத், சம்கார், தெபொராள், பாராக், கிதியோன், தோலா, யாவீர், யெப்தா, இப்சான், ஏலோன், அப்தோன், சிம்சோன், இப்படியாக கர்த்தரால் நியமிக்கப்பட்ட 12 நியாயாதிபதிகளின் வரலாறு இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் :

இதை எழுதியவர் யார் என்பது உறுதியாக அறியப்படவில்லை. ஆனாலும் இதை எழுதியவர் சாமுவேல் என்று கூறப்படுகிறது.

காலம் :

யோசுவாவின் காலம் முதல் சாமுவேல் தீர்க்கதரிசியின் காலம் வரை உள்ள 305 வருட இஸ்ரவேல் மக்களின் வெற்றி தோல்விகள் இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

பின்னணி : தேவ விரோதிகளான மக்கள்குழுக்கள் அடங்கியிருந்த கானானைக் கைப்பற்ற தேவன் உதவிசெய்தார். ஆனால் தேவனுக்கு கீழ்ப்படியாததால் அந்நாட்டை இழந்துபோகும் சூழ்நிலை.

முக்கிய வசனம் : "அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்". நியா. 17:6

முக்கிய மனிதர்கள் : ஒத்னியேல், ஏகூத், தெபோராள், கிதியோன், அபிமெலேக்கு, யெப்தா, சிம்சோன், தெலிலாள்

நூல் சிறப்பு : இஸ்ரவேலின் முதல் உள்நாட்டுப்போரை இந்நுல் குறிப்பிடுகிறது.

மையக்கருத்து :

சத்துருக்களின் வன்முறையும், புலம்பல்களும் கர்த்தர் கொடுக்கும் விடுதலையும்.

நூல் பகுப்பு :

I. நியாயாதிபதிகளின் நாட்களின் சூழ்நிலைமை:

அதிகாரங்கள் 1,2

1. கானானின் புறஜாதியர்

யோசுவாவின் மரணத்திற்குப்பின்	-	1 : 1-3,4
யூதர்களின் வெற்றி	-	1 : 1-20
பென்யமீனின் வெற்றி	-	1 : 21-26
மனாசேயின் வெற்றி	-	1 : 27-36
2. போகீமில் வைத்து முன்னெச்சரிப்பு	-	2 : 1-5
யோசுவாவின் மரணம்	-	2 : 6-10
பாகால்களை சேவிப்பார்கள்	-	2 : 11-23

II. இஸ்ரவேலரைத் துன்புறுத்திய அரசுகளும், நியாயாதிபதிகளும்:

அதிகாரங்கள் 3 - 16

நியாயாதிபதிகளும் அவர்கள் காலங்களும்:

(i) ஒத்னியேல்	-	40 வருடம்	3 : 5-11
(ii) ஏகூத்	-	80 வருடம்	3 : 12-30
(iii) சம்கார்	-	80 வருடம்	3 : 31
(iv) பாராக் தெபோரா	-	40 வருடம்	4 : 1-15,31
(v) கிதியோன்	-	40 வருடம்	6 : 11, 8:28
(vi) தோலா	-	23 வருடம்	10 : 1,2
(vii) யாவீர்	-	22 வருடம்	10 : 3-5
(viii) யெப்தா	-	6 வருடம்	10 : 6-12
(ix) இப்சான்	-	7 வருடம்	12 : 8-10
(x) ஏலோன்	-	10 வருடம்	12 : 11,12
(xi) அப்தோன்	-	8 வருடம்	12 : 13-15
(xii) சிம்சோன்	-	20 வருடம்	13 : 1-16

3. இஸ்ரவேல் அந்நியதேவர்களைச் சேவித்தல் 3 : 1-6

ஒத்னியேல் - 3 : 7-11

ஏகூத் - 3 : 12-30

சம்கார் - 3 : 31

4. தெபொராளும் பாராக்கும் - 4 : 1-24

5. தெபொராளின் சங்கீதம் - 5 : 1-31

6. கிதியோன் - 6 : 1-40

7. மீதியானியர்களைத் தோற்கடித்தல் - 7 : 1-25

8. கிதியோனின் ஆட்சியும் மரணமும் - 8 : 1-34

9. அபிமெலேக்கு - 9 : 1-57

10. தோலா - 10 : 1-2

யாவீர் - 10 : 3-5

யெப்தா - 10 : 6-18

11. யெப்தா - 11 : 1-40

12. யெப்தா - 12 : 1-7

இப்சான் - 12 : 8-10

ஏலோன் - 12 : 11-12

அப்தோன் - 12 : 13-15

13. சிம்சோனின் பிறப்பு - 13 : 1-25

14. சிம்சோனின் திருமணம் - 14 : 1-20

15. சிம்சோன் பெலிஸ்தியரைத் தோற்கடித்தல் - 15 : 1-20

16. சிம்சோனின் மரணம் - 16 : 1-31

III. விக்கிரகாராதனையும், உள்நாட்டுப் போராட்டமும்:

அதிகாரங்கள் 17 - 21

17. மீகாவின் ஆராதனை - 17 : 1-13

18. தாண் புத்திரர்களின் தாக்குதல் - 18 : 1-31

19. கிபியோனில் நடந்தவை - 19 : 1-30

20. இஸ்ரவேலில் முதல் போர் - 10 : 1-43

21. இழந்துபோன கோத்திரங்களுக்காக
புலம்பல் - 21 : 1-25

சில புள்ளிவிபரங்கள்:

இந்த புத்தகத்தில் 21 அதிகாரங்களும் 618 வசனங்களும் உள்ளன. வரலாற்றுத் தொடர்புடைய வசனங்கள் 85, நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 33, கேள்விகள் 92, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 23, கட்டளைகள் 71, எச்சரிக்கைகள் 26, வாக்குத்தத்தங்கள் 5.

8. ரூத்

யூத வம்சத்தவளல்லாத ரூத், தன் தேசத்தையும், மோவாப் தெய்வங்களையும் விட்டுவிட்டு தன் மாமியான நகோமியோடு முன்னும் பின்னும் அறியாத தேசத்திற்குக் கடந்து வருகிறாள். அதினிமித்தம் கர்த்தர் அவளை ஆசீர்வதித்து செல்வந்தனான போவாசுக்கு அவள் மனைவியானாள். எல்லாம் இழக்கப்பட்ட நிலையிலும், தன் கணவனின் மரணத்திற்குப் பின்னரும், தன் மாமியார் நகோமியோடு சேர்ந்து நின்றதால் தாவீதின் பிதாக்கள் பட்டியலிலும் இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றிலும் இடம் பெற்றுள்ளாள் ரூத்.

ஆசிரியர்:

சாமுவேல் தீர்க்கதரிசியால் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பின்னணி : தங்கள் மனப்போக்கின்படி வாழ்ந்த இஸ்ரவேலரின் இருண்டகாலம்.

முக்கிய வசனம் : "அதற்கு ரூத்; நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக் குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்". ரூத். 1:16

முக்கிய மனிதர்கள் : ரூத், நகோமி, போவாஸ்

முக்கிய இடங்கள் : மோவாப், பெத்லகேம்

காலம்:

நியாயாதிபதிகளின் காலக்கட்டத்தில் கி.மு. 1322 முதல் 1312 வரையுள்ள பத்து வருட சரித்திரம் இதில் அடங்கியுள்ளது.

நூல் பகுப்பு :

I. நகோமி மோவாபில் குடியேறுதலும், திரும்பி வருதலும் 1:1 - 22

1. எலிமலேக்கின் குடும்பம் மோவாபில் - 1 : 1-5

2. நகோமியும் ரூத்தும் பெத்லெகேமில் - 1 : 6-22

II. ரூத் ஏற்றுக்கொள்ளப்படுதல் : 2:1 - 3:18

3. ரூத் போவாசின் வயலில் - 2 : 1-23

3. ரூத் போவாசின் களத்தில் - 3 : 1-18

III. போவாசும் ரூத்தும் : 4 : 1 - 22

4. ரூத்தின் திருமணம் - 4 : 1-22

ரூத்தின் குமாரன் - 4 : 13-17

தாவீதின் வம்ச பாரம்பரியம் - 4 : 18-22

சில புள்ளிவிபரங்கள்:

இந்த புத்தகத்தில் 4 அதிகாரங்களும் 85 வசனங்களும் உள்ளன. கேள்விகள் 16, தீர்க்கதரிசனங்கள் இல்லாததும், இஸ்ரவேலருக்கு தீர்க்கதரிசி வழியான செய்தி இல்லாததுமான முதல் நூல். கட்டளைகள் 30, வாக்குத்தத்தங்கள் 2.

9. I சாமுவேல்

இறுதி நியாயாதிபதியான சாமுவேலின் காலம் முதல் தாவீதின் ஆட்சியின் கடைசி வரையான வரலாற்றினை சாமுவேலின் இரண்டு புத்தகங்களும் கூறுகின்றன. கி.மு.1050-ல் இஸ்ரவேலருக்கு பெலிஸ்தியரின் மிரட்டுதல் அதிகமானது. நியாயாதிபதிகளால் பெலிஸ்தியர்களைத் தற்காலிகமாக அடக்க முடிந்தது. என்றாலும், இதற்கு ஒரு நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை. ஒரு ராஜா இருந்தால் நலமாயிருக்கும் என்று மக்கள் கருத்து தெரிவித்தனர். மக்களின் விருப்பத்திற்கேற்ப செயல்படுவதற்கான அனுமதி சாமுவேலுக்கு கிடைத்ததால் சவுலை இஸ்ரவேலரின் முதல் ராஜாவாக அபிஷேகம் செய்தார். சவுலின் பதவியேற்பும், தாவீது பெலிஸ்தியரோடு செய்கின்ற யுத்தமும், வெற்றிகளும் இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

Jerome-ன் Wall Gate என்ற மொழிபெயர்ப்பில் I சாமுவேல், II சாமுவேல், I இராஜாக்கள், II இராஜாக்கள் என்ற இந்த 4 புத்தகங்களும் சேர்த்து **'Books of the Kings'** என்று பெயரிடப்பட்டள்ளது.

ஆசிரியர் :

பெயர் குறிப்பிடப்படவில்லையென்றாலும், சாமுவேல் தான் இதை எழுதியிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

பின்னணி : நியாயாதிபதிகளின் காலத்தில் இப்புத்தகம் தொடங்குகிறது. தேவ ஆட்சியிலிருந்து ராஜாவின் ஆட்சிக்குச் செல்லும் ஆட்சி மாற்றம் ஏற்படுகிற சூழ்நிலை.

முக்கிய வசனம் : "அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி: ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத்தான் தள்ளினார்கள்,

இப்போதும், அவர்கள் சொல்லைக் கேள்; ஆனாலும் உன் அபிப்பிராயத்தைக் காட்டும்படி அவர்களை ஆளும் ராஜாவின் காரியம் இன்னது என்று அவர்களுக்குத் திடசாட்சியாய்த் தெரியப்படுத்து என்றார்". I சாமு. 8:7,9

முக்கிய மனிதர்கள் : ஏலி, அன்னாள், சாமுவேல், சவுல், யோனத்தான், தாவீது

காலம் :

சாமுவேலின் பிறப்பு முதல் சவுலின் மரணம் வரை (கி.மு.1161 -1056 வரையுள்ள) 115 வருட சரித்திரம் இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

மையக்கருத்து :

இந்த புத்தகத்தை மூன்று நபர்களின் வாழ்க்கை வரலாறாக பிரிக்கலாம்.

1. சாமுவேல் — 1 - 7 அதிகாரங்கள்
2. சவுல் — 8 - 15 அதிகாரங்கள்
3. தாவீது — 16 - 31 அதிகாரங்கள்

நூல் பகுப்பு :

I. சாமுவேலின் நீதி விசாரிப்புக்காலம்: அதிகாரங்கள் 1-7

1. சாமுவேலின் பிறப்பு - 1 : 1-28
2. அன்னாளின் சங்கீதம் - 2 : 1-11
   ஏலியின் குமாரர் - 2 : 12-36
3. தேவ அழைப்பு - 3 : 1-21
4. கர்த்தருடைய பெட்டி பிடிக்கப்படுதல் - 4 : 1-11
   ஏலியின் மரணமும் இக்கபோத்தின் பிறப்பும் - 4 : 12-22
5. கர்த்தருடைய பெட்டி பெலிஸ்தியரின் தேசத்தில் - 5 : 1-12
6. கர்த்தருடைய பெட்டி திரும்பி வருதல் - 6 : 1-7
   கர்த்தருடைய பெட்டி பெத்ஷிமேசுக்கு போகுதல் - 6 : 8-21
7. கர்த்தருடைய பெட்டி அபினதாபின் வீட்டில் - 7 : 1-2
   இஸ்ரவேல் பிஸ்பிவில் - 7 : 3-17

II. சாமுவேலின் ஆட்சிக்காலம்: அதிகாரங்கள் 8-15

8. ராஜாவுக்கான அறைகூவல் - 8 : 1-22
9. சாமுவேலுக்கருகில் சவுல் - 9 : 1-27
சவுல் அபிஷேகம் செய்யப்படுகிறார்
10. சவுல் ராஜாவாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் - 10 : 1-27
11. அம்மோனியரை தோற்கடித்தல் - 11 : 1-14
12. சாமுவேல் விடைபெறுதல் - 12 : 1-25
13. சவுல் வெளியேற்றப்படுகிறார் - 13 : 1-23
14. யோனத்தானின் வீரம் - 14 : 1-52
15. சவுலின் படையெடுப்பு - 15 : 1-35

III. அரியணை பெறாத ராஜாவான தாவீதின் நாடோடிகாலம்: அதிகாரங்கள் 16-31

16. தாவீதின் அபிஷேகம் - 16 : 1-13
தாவீதும் சவுலும் - 16 : 14-23
17. தாவீதும் கோலியாத்தும் - 17 : 1-58
18. தாவீதும் சவுலும் - 18 : 1-30
19. தாவீதைத் கொல்ல முயற்சி - 19 : 1-24
20. யோனத்தான் தாவீதைக் காப்பாற்றுதல் - 20 : 1-42
21. தாவீது ஓடிப்போதல் - 21 : 1-15
22. அதுல்லாம் கெபியில் சவுல் - 22 : 1-5
ஆசாரியர்களைக் கொலைசெய்தல் - 22 : 6-23
23. தாவீது கேகிலாவில் - 23 : 1-13
தாவீது சீப்பில் - 23 : 14-29
24. தாவீதைத் தேடி சவுல் - 24 : 1-5
சவுலைக் கொல்லவில்லை - 24 : 16-22
25. சாமுவேலின் மரணம் - 25 : 1

தாவீதும் நாபாலும் - 25 : 2-44

26. தாவீது சவுலைக் கொல்லவில்லை - 26 : 1-25

27. தாவீது பெலிஸ்தியரின் நாட்டில் - 27 : 1-12

28. சவுல் அஞ்சனம் பார்ப்பவளிடம் - 28 : 1-25

29. பெலிஸ்தியர் தாவீதைப் புறக்கணித்தல் - 29 : 1-11

30. அமலேக்கியருடன் போர் - 30 : 1-30

31. சவுல், குமாரர்களின் மரணம் - 31 : 1-13

சில புள்ளிவிபரங்கள்:

இந்த புத்தகத்தில் 31 அதிகாரங்களும் 810 வசனங்களும் உள்ளன. கேள்விகள் 157, நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 50, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 1, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 29, வாக்குத்தத்தங்கள் 4, கட்டளைகள் 117, எச்சரிக்கைகள் 57.

10. II சாமுவேல்

சாமுவேல் இறந்த பிறகு நடந்த சம்பவங்கள் இந்த புத்தகத்தில் குறிப்பட்டப்பட்டுள்ளதால், இந்த நூலின் ஆசிரியர் காத், நாத்தான் என்னும் இருவரில் ஒருவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பின்னணி : தாவீதின் ஆட்சியின் கீழிருந்த இஸ்ரவேல் அரசாங்கம்.

முக்கிய வசனம் : "கர்த்தர் தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக திடப்படுத்தி தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை உயர்த்தினார் என்று தாவீது கண்டறிந்த போது". II சாமு. 5:12

காலம்:

கி.மு.1056 முதல் 1018 வரையிலான 38 வருட சரித்திரம் இந்த புத்தகத்தில் உள்ளது.

மையக்கருத்து:

சாமுவேலின் முதல் புத்தகம் இஸ்ரவேலரின் தோல்வியைக் குறிக்கிறது. இரண்டாம் புத்தகம் தாவீதின் மூலமாகக் கிடைத்த வெற்றியைக் குறிக்கிறது.

நூல் பகுப்பு:

I. **தாவீது பெற்ற வெற்றிகள்:** **அதிகாரங்கள் 1-10**

1. சவுலின் மரணம் - 1 : 16
   தாவீதின் துக்கம், புலம்பல் - 1 : 17-27
2. தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டவன் - 2 : 1-32
3. தாவீது எபிரோனில் - 3 : 1-6
   அப்னேரின் உடன்படிக்கை - 3 : 7-39
4. இஸ்போசேத் கொல்லப்படுதல் - 4 : 1-12
5. தாவீது இஸ்ரவேலின் அரசர் - 5 : 1-25
6. கர்த்தருடைய பேழை கொண்டுவரப்படுகிறது - 6 : 1-23
7. ஆலயம் கட்ட தாவீதின் ஆசீர்வாதம் - 7 : 1-29

8. தாவீதின் வெற்றி - 8 : 1-18
9. மேவிபோசேத்தும் தாவீதும் - 9 : 1-13
10. அம்மோனியர்களைத் தோற்கடித்தல் - 10 : 1-19

II. தாவீதின் பாவம்:

11. தாவீதும் பத்சேபாளும் - 11 : 1-27

III. பாவத்தின் விளைவால் தாவீதுக்கு ஏற்பட்ட பாடுகள்:
அதிகாரங்கள் 12-24

12. நாத்தானின் குற்றச்சாட்டு - 12 : 1-12
தாவீதின் அனுதாபம் - 12 : 13-31
13. அம்னோனும் தாமாரும் - 13 : 1-22
அப்சலோம் பழிவாங்குதல் - 13 : 23-38
14. அப்சலோம் திரும்பி வருதல் - 14 : 1-33
15. அப்சலோமின் சேனைப்புரட்சி - 15 : 1-37
16. தாவீதும் சீபாவும் - 16 : 1-4
தாவீதும் சீமேயியும் - 16 : 5-14
எருசலேமில் அப்சலோம் - 16 : 15-23
17. ஊசாய் அப்சலோமை ஏமாற்றுதல் - 17 : 1-29
18. எப்பிராயீம் யுத்தமும் அப்சலோம் கொல்லப்படுதலும் - 18 : 1-33
19. தாவீது எருசலேமுக்குத் திரும்பி வருதல் - 19 : 1-40
சேபாவின் போட்டி - 19 : 41-43
20. சேபாவின் புரட்சி - 20 : 1-26
21. கிபியோனியர்கள் பழிவாங்குதல் - 21 : 1-9
யோனத்தானின் எலும்புகள் - 21 : 10-14
தாவீதின் படைவீரர்கள் - 21 : 15-22
22. தாவீதின் வெற்றி கீதம் - 22 : 1-51

23. தாவீதின் இறுதி வார்த்தைகள் - 23 : 1-7

தாவீதிற்காக எதிரிகளை அழித்தவர்கள் - 23 : 1-7

24. தாவீதும் மக்கட்தொகை கணக்கெடுப்பும் - 24 : 1-17

அர்வனாவின் களத்தில் பலிபீடம் - 24 : 18-25

சில புள்ளிவிபரங்கள்:

இந்த புத்தகத்தில் 24 அதிகாரங்களும் 695 வசனங்களும் உண்டு. கேள்விகள் 125, வரலாற்றுத் தொடர்புடைய வசனங்கள 679, நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 9, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 7, தேவனிடமிருந்து சிறப்பு செய்திகள் 11, கட்டளைகள் 70, வாக்குத்தத்தங்கள் 13, எச்சரிக்கைகள் 25

11. I இராஜாக்கள்

சாமுவேலின் பிறப்பு முதல் தாவீது ராஜாவின் ஆட்சி வரையுள்ள இஸ்ரவேல் வரலாறு I, II சாமுவேலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.மு. 587ல் எருசலேம் அழிவது வரையிலான வரலாறு I, II இராஜாக்கள் புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் :

இந்த புத்தகத்தின் ஆசிரியர் யாரென தெளிவாகத் தெரியவில்லை. எரேமியாவாக இருக்கலாமென கருதப்படுகிறது.

பின்னணி : இஸ்ரவேல் தேசம் பிளவுபடுகிறது. உலகநிலையில் மட்டுமன்றி, ஆவிக்குரிய நிலையிலும் பிரிவினை அடைகிறது.

முக்கிய வசனம் : "நான் உனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நீ செய்து, என் கட்டளைகளையும், என் நியாயங்களையும் கைக்கொள்ளும்படிக்கு, என் சமூகத்தில் மன உத்தமமும், செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால்

இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று உன் தகப்பனாககிய தாவீதோடே நான் சொன்னபடியே, இஸ்ரவேலின்மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்". I இராஜா. 9:4,5

முக்கிய மனிதர்கள் : தாவீது, சாலொமோன், ரெகொபெயாம், யெரொபெயாம், எலியா, ஆகாப், யேசபேல்

காலம் :

தாவீதின் மரணம், சாலொமோனின் ஆட்சி போன்ற பல ராஜாக்களின் ஆட்சிக்காலம் உட்பட்ட 118 வருட வரலாறு இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

மையக்கருத்து :

ராஜாக்களின் வரலாறும், எலியா தீர்க்கதரிசியின் ஊழியமும் இதில் விளக்கப்பட்டுள்ளது. யூதாவிலும், இஸ்ரவேலிலும், இந்த

காலக்கட்டத்தில் தீர்க்கதரிசிகள் பலமாக செயல்பட்டு வந்தார்கள். விக்கிரகாராதனையிலிருந்து ஜனங்களைப் பின்மாற்ற தீர்க்கதரிசிகள் முயற்சி செய்தனர். கர்த்தரின் நியாயத்தீர்ப்பு குறித்து எச்சரிக்கை விடுத்தனர். எலியா, எலிசா, ஏசாயா, எரேமியா போன்றவர்கள் செய்த கடின முயற்சியின் போதும் அதற்கான பலன் கிடைக்கவில்லை.

நூல் பகுப்பு:

I. ஒன்றிணைந்த இஸ்ரவேல் தேசம்: அதிகாரங்கள் 1-11

1. சாலொமோன் ராஜாவாதல் - 1 : 1-53
2. தாவீதின் மரணம் - 2 : 1-12
   சாலொமோன் சத்துருக்களை அழித்தல் - 2 : 13-46
3. சாலொமோனின் ஞானம் - 3 : 1-28
4. அரண்மனை ஒழுங்குகள் - 4 : 1-34
5. தேவாலய வேலையும் பிரதிஷ்டையும் - 5 : 1-8
   ஈராமின் துணை - 5 : 9-18
6. ஆலயப் பணிகள் - 6 : 1-38
7. ராஜ அரண்மனை - 7 : 1-12
   ஆலயத்தின் இதர வேலைகள் - 7 : 13-51
8. வாக்குத்தத்த பேழை தேவாலயத்தில் - 8 : 1-21
   சாலொமோனின் ஜெபம் - 8 : 22-61
   தேவாலய பிரதிஷ்டை - 8 : 62-66
9. சாலொமோனுக்கு கர்த்தரின் வாக்குத்தத்தம் - 9 : 1-9
   சாலொமோனின் செயல்பாடுகள் - 9 : 10-27
10. சேபா ராஜஸ்திரீ வருகை - 10 : 1-29
11. சாலொமோனின் மரணம் - 11 : 1-40

II. பிளவுற்ற தேசம் - வடபகுதி இஸ்ரவேல், தென்பகுதி யூதா: அதிகாரங்கள் 12-22

12. தேசம் பிரிக்கப்படுதல் - 12 : 1-24
    யெரொபெயாம் கர்த்தரிடமிருந்து விலகுதல் - 12 : 25-33

13.	பெத்தேலுக்கு எதிரான தீர்க்கதரிசனம்	- 13 : 1-34
14.	யெரொபெயாமுக்குத் தண்டனை	- 14 : 1-18
	யெரொபெயாமின் மரணம்	- 14 : 19-20
	ரெகொபெயாமின் ஆட்சி	- 14 : 21-31
15.	அபியாவின் ஆட்சி	- 15 : 1-8
	ஆசாவின் ஆட்சி	- 15 : 9-24
	நாதாப்பின் ஆட்சி	- 15 : 25-32
	பாஷாவின் ஆட்சி	- 15 : 33-34
16.	ஆனானியனின் மகனுக்கு கர்த்தரின் வெளிப்பாடு	- 16 : 1-7
17.	எலியாவும் பஞ்சமும்	- 17 : 1-7
	எலியா சாறிபாத்தில்	- 17 : 8-24
18.	எலியாவும் தீர்க்கதரிசிகளும்	- 18 : 1-40
	பஞ்சம் முடிவடைகிறது	- 18 : 41-46
19.	ஓரேப்பில் எலியா	- 18 : 1-18
	எலிசா	- 18 : 19-21
21.	நாபோத்தின் திராட்சைத்தோட்டம்	- 21 : 1-29
22.	மிகாயா தீர்க்கதரிசியின் முன்னெச்சரிக்கை	- 22 : 1-25
	ஆகாப்பின் மரணம்	- 22 : 29-40
	யோசபாத்தின் ஆட்சி	- 22 : 41-50
	அகசியாவின் ஆட்சி	- 22 : 50-53

சில புள்ளிவிபரங்கள்:

இந்த புத்தகத்தில் 22 அதிகாரங்களும், 816 வசனங்களும் உண்டு. கேள்விகள் 66, நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 71, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 1, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 36, கட்டளைகள் 92, எச்சரிக்கைகள் 73, வாக்குத்தத்தங்கள் 6.

12. II இராஜாக்கள்

ராஜாக்களின் ஆட்சி காலத்தை விளக்குகின்ற இந்த புத்தகத்திற்கு ராஜாக்கள் என்ற பெயர் பொருத்தமானதே.

ஆசிரியர் :

இந்த புத்தகத்தை எழுதியவரைக் குறித்து தெளிவாக தெரியவில்லை. எரேமியாவே இப்புத்தகத்தையும் எழுதியிருக்கலாமென கருதப்படுகிறது.

பின்னணி : ஒன்றிணைந்த அரசாக இருந்த இஸ்ரவேல் தேசம் பிளவுற்று நூற்றாண்டுகளுக்குப் பின்.

முக்கிய வசனங்கள் : "அப்படியே இஸ்ரவேல் புத்திரர் யெரொபெயாம் செய்த எல்லா பாவங்களிலும் நடந்து,

கர்த்தர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரர் எல்லாரையும் கொண்டு சொல்லியிருந்தபடி, அவர்களைத் தமது சமூகத்தைவிட்டு அகற்றுகிறவரைக்கும், அவைகளைவிட்டு விலகாதிருந்தார்கள்; இப்படியே இஸ்ரவேலர் தங்கள் தேசத்தினின்று அசீரியாவுக்குக் கொண்டுபோகப்பட்டு இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள்". II இராஜா. 17:22,23

முக்கிய மனிதர்கள் : எலியா, எலிசா, சூனேமியாள், நாகமான், யேசபேல், யெகூ, போவாஸ், எசேக்கியா, மனாசே, யோசியா, யோயாக்கீம், சனகரீப், ஏசாயா, சிதேக்கியா, நேபுகாத்நேச்சார்

காலம் :

இஸ்ரவேலின் ராஜாவான அகசியாவின் ஆட்சிக்காலம் முதல் இஸ்ரவேல், யூத ராஜாக்களின் முடிவு வரையுள்ள 308 வருட சரித்திரம் இதில் எழுதப்பட்டுள்ளது. (கி.மு 896 - 588 வரை) எலியாவின் ஊழியத்தின் முடிவும், எலியாவின் ஊழியமும், இஸ்ரவேலிலுள்ள தீர்க்க தரிசிகளான ஓசியா, ஆமோஸ் போன்றவர்களும், யூதேயாவில் உள்ள ஏசாயா, எரேமியா, யோவேல், ஒபதியா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா போன்ற தீர்க்கதரிசிகளின் வரலாற்றினை இப்புத்தகங்கள் எடுத்துரைக்கிறது.

நூல் பகுப்பு:

I. பிளவுக்குப்பின் உருவான இரு அரசுகளின் ஒருமித்த வரலாறு: அதிகாரங்கள் 1-17

1.	எலியாவும் அகசியாவும்	- 1 : 1-18
2.	எலியா பரலோகத்தில்	- 2 : 1-12
	எலிசாவின் செயல்பாடு	- 2 : 13-25
3.	இஸ்ரவேலருக்கும் மோவாபியருக்கும் போர்	- 3 : 1-27
4.	விதவையின் எண்ணெய்	- 4 : 1-7
	சூனேம்மியாளின் மகன்	- 4 : 38-41
	அப்பம் புசித்தல்	- 4 : 42-44
	விஷம் கலந்த உணவு	- 4 : 38-41
5.	நாகமானின் துன்பம்	- 5 : 1-27
6.	தண்ணீரில் விழுந்த கோடாரி	- 6 : 1-7
	சீரியாவின் தோல்வி	- 6 : 8-33
7.	எலிசாவின் தீர்க்கதரிசனம்	- 7 : 1-2
	நான்கு குஷ்டரோகிகள்	- 7 : 3-20
8.	பஞ்சத்தைக் குறித்த முன்னறிவிப்பு	- 8 : 1-6
	எலிசாவும் ஆசகேலும்	- 8 : 7-15
	யூதாவின் ராஜா யோராம்	- 8 : 16-24
	யூதாவின் ராஜா அகசியா	- 8 : 25-29
9.	யெகூ இஸ்ரவேலின் ராஜா	- 9 : 1-13
	யோராமும் அகசியாவும் கொல்லப்படுதல்	- 9 : 14-29
	யேசபேல் கொல்லப்படுதல்	- 9 : 30-37
10.	ராஜகுடும்பங்களின் சங்காரம்	- 10 : 1-17
	பாகாலைச் சேவித்தவர்களின் மரணம்	- 10 : 18-31
	யெகூவின் மரணம்	- 10 : 32-36

11. அத்தாலியாள் - 11 : 1-21

12. யோவாஸ் - 12 : 1-21

13. யோவாகாஸ் ராஜா - 13 : 1-9

யோவகாஸ் ராஜா - 13 : 10-13

எலிசாவின் மரணம் - 13 : 14-25

14. அமத்சியா ராஜா - 14 : 1-22

யெரொபெயாம் ராஜா - 14 : 23-29

15. அசரியா ராஜா - 15 : 1-7

இஸ்ரவேல் ராஜாக்கள் - 15 : 8-12

சல்லூம் - 15 : 13-16

மெனாகேம் - 15 : 17-22

பெக்காகியா - 15 : 23-26

பெக்கா - 15 : 27-31

யோதாம் - 15 : 32-38

16. ஆகாஸ் - 16 : 1-20

17. ஓசெயா இஸ்ரவேலின் அரசன் - 17 : 1-4

சமாரியாவின் முற்றுகை - 17 : 5-23

சமாரியரின் உருவாக்கம் - 17 : 24-41

II. அசீரியா படையெடுப்புக்குப் பின் நிலைத்திருந்த ஒரே அரசனாகிய யூதாவின் வரலாறு: அதிகாரங்கள் 18-25

18. எசேக்கியா ராஜா - 18 : 1-12

சனகெரிப்பின் ஆக்கிரமிப்பு - 18 : 13-37

(கர்த்தரின் தூதன் 1,85,000 பேர்களைக் கொன்றது)

19. ஏசாயா தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனம் - 19 : 1-37

20. எசேக்கியா குணமடைதல் - 20 : 1-11

எசேக்கியாவின் முடிவு - 20 : 12-21

21.	மனாசே ராஜா	- 21 : 1-18
	ஆமோன் ராஜா	- 21 : 19-26
22.	யோசியா ராஜா நியாயப்பிரமாண	- 22 : 1-7
	புஸ்தகத்தைக் கண்டெடுத்தல்	- 22 : 8-20
23.	யோசியாவின் மரணம்	- 23 : 1-30
	யோவாகாஸ் ராஜா	- 23 : 31-34
	யோயாக்கீம் ராஜா	- 23 : 35-37
24.	நேபுகாத்நேச்சாரின் ஆக்கிரமிப்பு	- 24 : 1-7
	யோயாக்கீன்	- 24 : 8-20
25.	எருசலேமின் மீறுதல்	- 25 : 1-7
	தேவாலயத்தை அழித்தல்	- 25 : 8-17
	பாபிலோனுக்குச் செல்லுதல்	- 25 : 18-30

சில புள்ளிவிபரங்கள்:

இந்த புத்தகத்தில் 25 அதிகாரங்களும், 719 வசனங்களும் உண்டு. கேள்விகள் 118, வரலாற்றுத் தொடர்புடைய வசனங்கள் 560, நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 58, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 1, எச்சரிக்கைகள் 65, கட்டளைகள் 118, வாக்குத்தத்தங்கள் 3, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 20.

இஸ்ரவேலின் அரச பரம்பரை

1. ஒன்றாம் அரச பரம்பரை :

1. யெரொபெயாம் - 22 வருடங்கள் ஆட்சி செய்தான்
2. நாதாப் - 2 வருடங்கள்

2. இரண்டாம் அரச பரம்பரை :

1. பாஷா - 24 வருடங்கள்
2. ஏலா - 2 வருடங்கள்

3. மூன்றாம் அரச பரம்பரை :

1. சிம்ரி - 7 நாட்கள்

4. நான்காம் அரச பரம்பரை :

1. உம்ரி - 12 வருடம் ஆட்சி செய்தான்
2. ஆகாப் - 22 வருடம் ஆட்சி செய்தான்
3. அகசியா - 2 வருடங்கள்

5. ஐந்தாம் அரச பரம்பரை :

1. ஏகூ - 28 வருடங்கள்
2. யோவாகாஸ் - (13 : 1-9) 13 வருடம்
3. யோவாஸ் - (13 : 10-14) 16 வருடம்
4. யெரோபெயாம் - (14 : 23-29)41 வருடம்
5. சகரியா - (15 : 8-12) 6 மாதம்

6. ஆறாவது அரச பரம்பரை :

சல்லூம் - (15 : 13-15) 1 மாதம்

7. ஏழாவது அரச பரம்பரை :

1. மெனாகேம் - (15 : 16-22) 10 வருடம்
2. பெக்காகியா - (15 : 23-26) 2 வருடம்

8. எட்டாவது அரச பரம்பரை :

பெக்கா - (15 : 23-26) 20 வருடம்

9. ஒன்பதாவது அரச பரம்பரை :

ஓசெயா - (17 : 1-23) 9 வருடம்

யூத அரச பரம்பரை

1.	யோராம்	8 : 16-24
2.	அகசியா	8 : 25, 9:29
3.	அத்தாலியாள் (ராணி)	11 : 1-21
4.	யோவாகாஸ்	12 : 1-21
5.	அமத்சியா	14 : 1-20
6.	அசரியா	15 : 1-7
7.	யோதாம்	15 : 32-38
8.	ஆகாஸ்	16 : 1-20
9.	எசேக்கியா	18 : 1-20
10.	மனாசே	21 : 1-18
11.	ஆமோன்	21 : 19-26
12.	யோசியா	22 : 1-23
13.	யோவாகாஸ்	23 : 31-34
14.	யோயாக்கிம்	23 : 34
15	யோயாக்கீம்	24 : 8-17
16.	சிதேக்கியா	24 : 18-25

சிதேக்கியாவின் ஆட்சி காலத்தின் 9-ஆம் ஆண்டில் பாபிலோனின் ராஜாவான நேபுகாத்நேச்சார் எருசலேமைக் கைப்பற்றினான். இரண்டு வருடங்களுக்குப் பிறகு பட்டணத்தைத் தோற்கடித்தான். சிதேக்கியாவைக் கைது செய்து கி.மு 588-ல் பாபிலோனுக்குக் கொண்டு போனார்கள்.

13. I நாளாகமம்

சவுலின் காலம் முதல் எருசலேமின் அழிவு வரையிலான வரலாறு I மற்றும் II நாளாகமத்தில் விளக்கப்பட்டுள்ளது. கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழிபெயர்ப்புகளில் பாரலி பொமேனா (Parali pomena) அதாவது விடுபட்டவை என்று அர்த்தம். ஆனால் சாமுவேல் மற்றும் இராஜாக்கள் புத்தகத்தில் விடுபட்டவை இதில் குறிப்பிடப்படவில்லை. அடிமைத்தனத்திலிருந்து திரும்பிய இஸ்ரவேல் மக்கள் முன்புள்ள வரலாற்றிற்கு விளக்கங்களைக் கூறுவதாக உள்ளது.

கர்த்தரிடம் விசுவாசமாயிருந்த தாவீது, சாலொமோன், யோசபாத், எசேக்கியா, யோசியா போன்றவர்கள் பெற்ற நன்மைகள் இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

அடிமைத்தனத்திற்குப் பிறகுள்ள காலம், யூதா கோத்திரம், தாவீதின் வம்சம், லேவியர், எருசலேம் நகரம், தேவாலயம் சம்பந்தப்பட்ட குறிப்புகள் இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர் :

இதன் ஆசிரியர் லேவியனாக இருக்கலாம் என்றும், எஸ்றாவாக இருக்கலாம் என்றும் இரண்டு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

பின்னணி : சிறையிருப்புக்குப்பின் ஒரு ஆசாரியனின் பார்வையில் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

முக்கிய வசனங்கள் : "கர்த்தர் தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாகத் திடப்படுத்தி, இஸ்ரவேல் என்னும் தம்முடைய ஜனத்தினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை மிகவும் உயர்த்தினார் என்று தாவீது அறிந்துகொண்டான்". I நாளா. 14:2

முக்கிய மனிதர்கள் : தாவீது, சாலொமோன்

முக்கிய இடங்கள் : எபிரோன், எருசலேம்

காலம் :

கி.மு. 400 வம்ச வரலாற்றைத் தவிர கிட்டத்தட்ட 41 வருட வரலாறு இதில் அடங்கியுள்ளது.

நூல் பகுப்பு:

I. தாவீதின் தலைமுறைப்பட்டியல்: அதிகாரங்கள் 1-9

1.	வம்ச வரலாறு :	1 : 1-27
	ஆதாம் முதல் ஆபிரகாம் வரை	
2.	யூதாவின் சந்ததிகள்	2 : 1-55
3.	தாவீதின் சந்ததிகள்	3 : 1-24
4.	யூதாவின் பிற சந்ததிகள்	4 : 1-23
	சிமியோனின் சந்ததிகள்	4 : 24-43
5.	ரூபனின் சந்ததிகள்	5 : 1-10
	காத்தின் சந்ததிகள்	5 : 11-26
6.	லேவியின் சந்ததிகள்	6 : 1-81
7.	இசக்காரின் சந்ததி	7 : 1-5
	பென்யமீன் சந்ததி	
	தாண் சந்ததி	7 : 6-13
	நப்தலி சந்ததி	
	மனாசேயின் சந்ததிகள்	7 : 14-19
	எப்பிராயீமின் சந்ததிகள்	7 : 20-29
	ஆசேரின் சந்ததிகள்	7 : 30-40
8.	பென்யமீனின் சந்ததிகள்	8 : 1-32
	சவுலின் குடும்பம்	8 : 33-40
9.	அடிமைத்தனத்திலிருந்து திரும்பியவர்கள்	9 : 1-9
	இஸ்ரவேல் சம்பிரதாய வம்சங்கள்	9 : 1-9

II. தாவீதின் வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள்:

அதிகாரங்கள் 10-29

10.	சவுலின் மரணம்	10 : 1-4

11.	இஸ்ரவேலின் ராஜாவாக தாவீது	11 : 1-9
	தாவீதின் படைவீரர்கள்	11 : 10-47
12.	தாவீதுக்குப் பின்	12 : 1-40
13.	தேவனுடைய பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டிலே	13 : 1-14
14.	தாவீதின் வெற்றி	14 : 1-17
15.	கர்த்தருடைய பெட்டி எருசலேமில்	15 : 1-29
16.	துதித்து புகழ்வதற்கு நியமிக்கப்பட்டவர்கள்	16 : 1-7
	ஆசாப்பின் துதிபாடல்	16 : 8-36
	ஊழியத்திற்காக	16 : 37-43
	கீத வாத்தியங்களை வாசிப்போர்	16 : 37-43
17.	நாத்தானின் தீர்க்கதரிசனம்	17 : 1-15
	தாவீதின் பணிவு	17 : 16-27
18.	தாவீதின் யுத்தங்கள்	18 : 1-17
19.	அம்மோனியரைத் தோற்கடித்தல்	19 : 1-19
20.	ராபாவைத் தோற்கடித்தல்	20 : 1-19
21.	தாவீது மக்கள்தொகை கணக்கெடுத்தல்	21 : 1-30
22.	ஆலயம் கட்ட பொருட்கள் சேகரித்தல்	22 : 1-19
23.	லேவியரும் அவர்களின் குடும்பங்களும்	23 : 1-32
24.	ஆரோன் குடும்பங்கள்	24 : 1-31
25.	பாடகற் குழு	25 : 1-31
26.	வாசற் காக்கிறவர்கள்	26 : 1-32
27.	சேனாபதிகள்	27 : 1-24
	கண்காணிப்பவர்கள்	27 : 25-24
28.	ஆலய கட்டுமான ஆலோசனைகள்	28 : 1-21

29. கட்டுமான பணிக்கான காணிக்கைகள் 29 : 1-30

தாவீதின் மரணம் 29 : 1-30

சில புள்ளிவிபரங்கள்:

இந்த புத்தகத்தில் 29 அதிகாரங்களும் 942 வசனங்களும் உள்ளன. வரலாற்றுத் தொடர்புடைய வசனங்கள் 927. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 81. நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 71, எச்சரிக்கைகள் 30, கட்டளைகள் 53, கேள்விகள் 19, வாக்குத்தத்தங்கள் 9, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 8.

14. II நாளாகமம்

காலம் :

சாலொமோன் ராஜாவின் ஆட்சி காலம் கி.மு. 1015 முதல் பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து யூதர்கள் திரும்பிச்செல்ல கோரேஸ் ராஜா கட்டளைக் கொடுத்தது வரையான 427 வருட வரலாறு இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் : I நாளாகமம் புஸ்தகத்தை எழுதியவரே இதையும் எழுதியிருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

பின்னணி : தேவ ஆராதனையைத் தமது நாட்டின் நிலைபெறுதலுக்கு அடிப்படைத்தேவை என்று கருதி தேவாலயம் கட்டுவதற்காக அனுமதிபெற்று திரும்பிவந்த தேவமக்களான யூதா மக்களுக்கு ஆவிக்குரிய உற்சாகம் அளிக்கும் சூழ்நிலையில் எழுதப்பட்டுள்ளது.

முக்கிய வசனங்கள் : "என் நாமந்தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்". II நாளா. 7:4

முக்கிய மனிதர்கள் : சாலொமோன், சேபா ராஜஸ்திரீ, ரெகொபெயாம், ஆசா, யோசபாத், யோராம், யோவாஸ், உசியா, ஆகாஸ், எசேக்கியா, மனாசே, யோசியா

முக்கிய இடம் : எருசலேம்

நூல் **பகுப்பு:**

I.	**சாலொமோனின் ஆட்சி காலம்:**	**அதிகாரங்கள் 1-9**
1.	சாலொமோனின் ஞானம்	1 : 1-12
	சாலொமோனின் செல்வம்	1 : 13-17
2.	ஆலயப் பணிகளின் ஆயத்தம்	2 : 1-18
3.	ஆலயப் பணிகள்	3 : 1-17
4.	ஆலய பணிமூட்டுகள்	4 : 1-22

5. பணிமூட்டுகள் தேவனுடைய ஆலயத்தில் 5 : 1
கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி
ஆலயத்தில் 5 : 2-14
6. சாலொமோனின் ஜெபம் 6 : 1-42
7. ஆலய பிரதிஷ்டை 7 : 1-10
கர்த்தர் காட்சியளித்தல் 7 : 11-22
8. சாலொமோனின் ஆசீர்வாதம் 8 : 1-18
9. சேபா ராஜஸ்திரீ சந்திப்பு 9 : 1-12
10. தேசம் பிரிக்கப்படுதல் 10 : 1-19
II. யூதா ராஜாக்களின் அரசாட்சி: அதிகாரங்கள் 10-36
11. ரெகோபெயாம் 11 : 1-23
12. ரெகொபெயாமின் இறப்பு 12 : 1-16
13. அபியா 13 : 1-22
14. ஆசா 14 : 1-15
15. அசரியாவின் தீர்க்கதரிசனம்
ஆசாவின் பதவிக்காலம் 15 : 1-19
18. ஆகாப் ராஜா 18 : 1-34
19. யோசபாத் 19 : 1-11
20. ஏதோமுக்கு எதிரான போர் 20 : 1-37
ஜெபமும் பதிலும் 20 : 1-37
21. யோராம் 21 : 1-20
22. அகசியா 22 : 1-9
அத்தலியாள் ராணி 22 : 10-12
23. அத்தலியாளின் ஆட்சி 22 : 1-21
24. யோவாஸ் 24 : 1-27
25. அமத்சியா 25 : 1-28
26. உசியா 26 : 1-23

27.	யோதாம்	27 : 1-9
28.	ஆகாஸ்	28 : 1-27
29.	எசேக்கியா	29 : 1-2
	தேவாலய சுத்திகரிப்பு	29 : 2-36
30.	பஸ்கா கொண்டாடுதல்	30 : 1-27
31.	சீர்ப்படுத்துதல்	31 : 1-21
32.	சனகெரிப் ஆக்கிரமிப்பு	32 : 1-21
	எசேக்கியாவின் முடிவு	32 : 22-33
33.	மனாசே	33 : 1-20
	ஆமோன்	33 : 21-25
34.	யோசியாவின்	34 : 1-7
	நியாயப்பிரமாணம்	34 : 8-28
	உடன்படிக்கை புதுப்பித்தல்	34 : 29-33
35.	பஸ்கா கடைபிடித்தல்	35 : 1-19
	யோசியாவின் மரணம்	35 : 20-27
36.	யோவாகாஸ்	36 : 1-4
	யோயாக்கீம்	36 : 5-8
	யோயாக்கீன்	36 : 9-10
	சிதேக்கியா	36 : 11-12
	எருசலேமின் மீறுதல்	36 : 13-21
	கோரேஸின் விளம்பரம்	26 : 22-2

சில **புள்ளிவிபரங்கள்:**

இந்த புத்தகத்தில் 36 அதிகாரங்களும் 822 வசனங்களும் உண்டு. வரலாற்றுத் தொடர்புடைய வசனங்கள் 583, நிறைவேறிய தீர்க்தரிசனங்கள் 31, நிறைவேறாத தீர்க்க தரிசனங்கள் 7, எச்சரிக்கைகள் 42, கட்டளைகள் 45, வாக்குத்தத்தங்கள் 8, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 21, கேள்விகள் 47.

15. எஸ்றா

பாபிலோனின் அடிமைகளாக இருந்தவர்கள் எருசலேமுக்குத் திரும்பிச் செல்லவும், அங்கு தேவாலயம் மீண்டும் கட்டவும், யூதர்களுக்கு அனுமதி வழங்கும் அறிக்கையை பெர்சியா ராஜாவான கோரேஸ் அறிவித்தார் (வெளியிட்டார்). திரும்பிச் சென்றவர்களால் முதலாவதாக கி.மு.515-ல் தேவாலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை பண்ணப்பட்டது. கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டவர்கள் பலருக்கு சமாரியரிடமிருந்து ஆதாயமுண்டானது. பெர்சியாவின் ராஜாவான அர்த்தசஸ்டாவின் அரண்மனையில் யூதர்களின் நலன்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட எஸ்றா மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பிரபலப்படுத்த அதிகார சான்றுகளோடு ஒரு கூட்டம் ஜனங்களோடு எருசலேமுக்கு வருகிறார். எஸ்றாவின் பெயரிலேயே இப்புத்தகம் அறியப் படுகிறது.

ஆசிரியர் : எஸ்றா

காலம் :

கோரேஸின் அறிக்கை மூலம் செருபாபேலின் தலைமையில் எருசலேமுக்குத் திரும்பும் காலம் (கி.மு.536) முதல் அர்த்தசஷ்டா ராஜாவின் அறிக்கை மூலம் எஸ்றாவின் தலைமையில் இஸ்ரவேல் திரும்பி வரும் காலம் வரையான கி.மு.458 வரையுள்ள 80 வருட வரலாறு இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னணி : நாளாகமம் நூற்களைப்போல் எஸ்றா நூலும் யூதா மக்களின் வரலாற்றைக் குறிப்பிடுகிறது. சிறையிருப்புக்குப் பின் யூதர் சொந்த நாட்டிற்குத் திரும்பி வருவதே இந்நூலின் பின்னணி.

முக்கிய வசனம் : "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்".

எஸ்றா. 7:10

முக்கிய மனிதர்கள் : கோரேஸ், செருபாபேல், ஆகாய், சகரியா, தரியு, முதலாம் அர்த்தசஷ்டா, எஸ்றா

முக்கிய இடங்கள் : பாபிலோன், எருசலேம்

மையக்கருத்து :

பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் திரும்பி வருதல்.

நூல் பகுப்பு:

I. தேவாலயம் திரும்பக் கட்டப்படுதல்
அதிகாரங்கள் 1-6

1.	அடிமைகள் திரும்பி வருதல்	1 : 1-11
2.	திரும்பி வந்த அடிமைகள்	2 : 1-70
3.	பலியிடுதல்	3 : 1-6
	ஆலயக் கட்டுமானம்	3 : 7-13
4.	ஆலயக் கட்டுமானத்துக்கு எதிர்ப்பு	4:1-24
5.	கட்டுமானம் ஆரம்பித்தல்	5 : 1-17
6.	தஸ்திர அறையைச் சோதித்தல்	6 : 1-12
	தேவாலய பிரதிஷ்டை	6 : 12-18
	பஸ்கா கடைபிடித்தல்	6 : 19-22

II. மக்களின் ஆன்மீக சீர்திருத்தங்கள் அதிகாரங்கள் 7-10

7.	எருசலேமில் எஸ்றா	7 : 1-28
8.	எஸ்றா திரும்பி வருதல்	8 : 1-36
9.	இஸ்ரவேலின் கலப்புத் திருமணம்	9 : 1-15
10.	கலப்புத் திருமணத்தின் முடிவு	10 : 1-44

சில **புள்ளி விபரங்கள்:**

இந்த புத்தகத்தில் 10 அதிகாரங்களும் 280 வசனங்களும் உள்ளன. தீர்க்கதரிசனங்கள், தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள், வாக்குத்தத்தங்கள் இல்லை. கேள்விகள் 9, கட்டளைகள் 43.

16. நெகேமியா

அர்த்தசஷ்டா ராஜாவின் அரண்மனையில் பானபாத்திரக்காரணராயிருந்த நெகேமியாவும் ராஜாவின் அனுமதியோடு எருசலேமை அடைந்தார்கள். அதன் சுவர் வேலையை முடித்தார்கள். நேகேமியா, அரசனின் உயர்ந்த பதவியொன்றில் நியமிக்கப்பட்டான். எஸ்றா, நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு முன்பாக வாசித்தார். எஸ்றாவும் நெகேமியாவும், இராணுவ வீரர்களும், புதுமையான மதச்செயல்பாடுகளுக்குத் தலைமை தாங்கினார். பாபிலோன் அடிமைத்தனத்திற்குப் பிறகான யூதர்களின் மறுவாழ்வை இப்புத்தகம் தெளிவாக விளக்குகிறது.

ஆசிரியர் :

நெகேமியாவாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

பின்னணி : கி.மு. 537-ல் செருபாபேலின் தலைமையில் எருசலேமிற்கு முதற்கட்ட திரும்பிவருகை நடந்தது. கி.மு. 468-ல் இரண்டாம் கட்ட திரும்பி வருகைக்கு எஸ்றா தலைமை தாங்கினார். கி.மு. 455-ல் இறுதியாக எருசலேமில் அலங்கங்களைப் பழுதுபார்த்து கட்டும்படி சிறைவாசிகளின் மூன்றாம் கட்ட வருகையில் நெகேமியாவும் சேர்ந்து கொண்டார்.

முக்கிய வசனம் : "அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைத் தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ்சொல்லி வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்". நெகேமியா. 8:8

முக்கிய மனிதர்கள் : நெகேமியா, எஸ்றா, சன்பல்லாத், தொபியா

முக்கிய இடம் : எருசலேம்

காலம் : கி.மு.445 முதல் 12 வருட வரலாறு இதில் உள்ளது.

மையக்கருத்து : எருசலேமில் சுவர் கட்டுதல்

நூல் பகுப்பு:

I. அலங்க சீர்திருத்தம்: **அதிகாரங்கள் 1-7**

1. நெகேமியாவின் ஜெபம் 1 : 1-11
2. எருசலேமில் நெகேமியா 2 : 1-20

3.	சுவர் வேலை தொடங்குதல்	3 : 1-32
4.	பணி தடைபடுதல்	4 : 1-23
5.	ஏழைகளின் புகார்	5 : 1-19
6.	சுத்த தந்திரங்கள்	6 : 1-14
	சுவர் வேலை நிறைவடைதல்	6 : 15-19
7.	செருபாபேலோடு வந்தவர்கள்	7 : 1-73
II.	**மக்களின் சீர்திருத்தம்:**	**அதிகாரங்கள் 8-13**
8.	கட்டளைகளை வாசித்தல்	8 : 1-18
9.	பாவங்களை அறிக்கையிடல்	9 : 1-37
10.	உடன்படிக்கையில் கையெழுத்திடல்	10 : 1-39
11.	ஜனங்கள் குடியேறுதல்	11 : 1-36
12.	செருபாபேலோடு வந்தவர்கள்	12 : 1-26
	சுவரின் பிரதிஷ்டை	12 : 27-47
13.	இஸ்ரவேலின் சுத்திகரிப்பு	13 : 1-3
	ஆலய சுத்திகரிப்பு	13 : 46
	ஆலய ஒழுங்குகள்	13 : 6-14
	ஓய்வுநாள் கடைபிடித்தல்	13 : 15-22
	சமூக சுத்திகரிப்பு	13 : 21-32

சில **புள்ளி விபரங்கள்:**

இந்த புத்தகத்தில் 13 அதிகாரங்களும் 406 வசனங்களும் உண்டு. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 3, எச்சரிக்கைகள் 3, கட்டளைகள் 14, வாக்குத்தத்தங்கள், தேவனிடமிருந்து சிறப்பு செய்திகள் இல்லை. கேள்விகள் 24.

17. எஸ்தர்

பெர்சியன் அரசாட்சியில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் அழிக்கப்படப் போவதாக மிரட்டல் உண்டானது. அகாஸ்வேரு ராஜாவின் ஆட்சி காலத்தில் (கி.மு. 485-465) ஆமான் என்ற மனிதன் உயர்ந்த பதவியிலிருந்தான். யூதனாக இருந்த மொர்தெகாய் அரசனின் அரமனை விசாரிப்புக்காரனாயிருந்தான். அகாஸ்வேரு அரசன் தன் ராஜஸ்திரீயான வஸ்தியின் மீது வெறுப்புக் கொண்டான். அவளுக்குப் பதிலாக யூத ஸ்திரீயான எஸ்தரை ராணியாக்கினான். இதனால் பொறாமை கொண்டு ஆமான் மொர்தெகாயை கொலை செய்யத் திட்டமிட்டான். மட்டுமல்லாமல் யூத வம்சத்தினர் அனைவரையும் கொலை செய்வதற்கான திட்டம் தீட்டினான். அதற்கான அனுமதியை அகாஸ்வேரு ராஜாவிடமிருந்து பெற்றான். அதற்கான ஒரு நாளை நிச்சயம் பண்ணினான். ஆனால் மொர்தெகாயின் ஆலோசனைப்படி எஸ்தர் அரசவைக்குள் நுழைந்தாள். மொர்தெகாயை தூக்கிலிட முயன்ற ஆமான் தூக்கிலிடப்பட்டார். ஆமானின் இடத்தில் ராஜா மொர்தெகாயை நியமித்தார். சத்துருக்களை யூதர்கள் முறியடித்தனர். அதன் அடையாளமாக ஆண்டுதோறும் பூரீம் என்ற விழாவினைக் கொண்டாடி வருகிறார்கள்.

ஆசிரியர் :

யார் எழுதினார் என்பது தெரியவில்லையென்றாலும் மொர்தெகாயாக இருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது.

காலம் :

கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் இந்த புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம்.

பின்னணி : வேதாகமத்தில் நெகேமியாவிற்குப் பின்பு எஸ்தர் நூல் வருகிறதெனினும், நெகேமியா நூலின் நிகழ்ச்சிகளுக்கு 30 ஆண்டுகளுக்கு முன்பே இந்நூலின் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. இந்நூலின் நிகழ்ச்சிகள் நடந்த இடம் பெர்சியா சாம்ராஜ்யத்தின் தலைநகரமான சூசானிலும், சக்கரவர்த்தியின் அரண்மனையிலும்

ஆகும்.

முக்கிய மனிதர்கள் : எஸ்தர், மொர்தெகாய், அகாஸ்வேரு ராஜா, ஆமான்

முக்கிய இடம் : பெர்சியாவின் சூசான் அரண்மனை

மையக்கருத்து :

கர்த்தர் என்ற வார்த்தை இந்த புத்தகத்தில் எங்குமில்லை. ஆயினும் சிதறிக் கிடந்த இஸ்ரவேலர்களுக்கான கர்த்தரின் திட்டத்தை இது விளக்குகிறது.

முக்கிய வசனம் :

"நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும் அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள், நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச்சொன்னான்". (எஸ்.4:14)

நூல் பகுப்பு:

I. யூதர்களுக்கெதிரான அச்சுறுத்தல்: அதிகாரங்கள் 1-4

1. ராஜாவின் விருந்தும் வஸ்தியின் கர்வமும் 1 : 1-12
   ராஜாவின் கட்டளையும் 1 : 13-22
2. வஸ்திக்கு பதிலாக எஸ்தர் 2 : 1-20
   மொர்தெகாய் ராஜாவின் உயிரைக் காப்பாற்றுதல் 2 : 21-23
3. ஆமானின் சதித்திட்டம் 3 : 1-15
4. யூத வரலாற்றில் பிரச்சனை 4 : 1-14
   ஆத்தாகு மூலமாக எஸ்தர் 4 : 5
   மொர்தெகாய் மூலமாக விவரங்களை அறிகிறாள் 4 : 5-12
   மொர்தெகாயின் ஆலோசனை 4 : 13-14
   எஸ்தரின் தீர்மானம் 4 : 15-16

II. யூதர்கள் பெற்ற அற்புதமான வெற்றி: அதிகாரங்கள் :5-10

5. எஸ்தரின் விருந்து 5 : 1-8

	இரண்டு விருந்து	5 : 9-6:14
6.	மொர்தெகாயைத் தூக்கிலிட ஆமான் தூக்குமரம் செய்தல், மொர்தெகாய் கனம் பண்ணப்படுதல்	6 : 1-14
7.	தூக்குமரம் ஆமானுக்கு	7 : 1-10
8.	ராஜாவின் புதிய கட்டளை	8 : 1-17
9.	யூதர்கள் பழிவாங்குதல்	9 : 1-19
	பூரீம் திருவிழா	9 : 20-32
10.	மொர்தெகாய் உயர்த்தப்படுதல்	10 : 1-15

சில புள்ளி விபரங்கள்:

இந்த புத்தகத்தில் 10 அதிகாரங்களும் 167 வசனங்களும் உண்டு. கட்டளைகள் 11, கேள்விகள் 21, தீர்க்கதரிசனங்கள், வாக்குத்தத்தங்கள், தேவனிடமிருந்துச் சிறப்புச்செய்திகள் இல்லை.

18. யோபு

கர்த்தருடைய விசுவாசியான யோபு பொருட்செல்வத்திலும் மக்கட்செல்வத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருந்தான். அவரைச் சோதிக்க ஆண்டவர் சாத்தானை அனுமதிக்கிறார். சொத்துக்களையும் பிள்ளைகளையும் இழந்தபோதும் யோபு கர்த்தருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிகிறான். உடல் முழுவதும் பருக்களால் பாதிக்கப்பட்ட யோபுவை அவன் மனைவி கூட வெறுக்கிறாள். என்றாலும் யோபு விசுவாசத்தைக் கைவிடவில்லை. மூன்று நண்பர்கள் யோபுவுக்கு ஆறுதல் கூறுகிறார்கள். இவர்களுடனான யோபுவின் உரையாடல் இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. எலிகூ என்ற கதாபாத்திரத்தின் மூலமாக யோபு தன்னுடைய நிலையை புரிந்துகொள்கிறான். கடினமான சோதனைகளின் போதும் அவன் மனம் சலனப்படவில்லை.

காலம் :

இந்நூலின் காலம் கி.மு. 2000 - 1880 வேதத்தில் மிகப் பழமையான புத்தகமாக இது கருதப்படுகிறது. யோபு, ஆபிரகாமின் காலத்தில் வாழ்ந்தவராக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

ஆசிரியர் :

இப்புத்தகத்தின் ஆசிரியரைப் பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன. மோசேயாக இருக்கலாம் என்று ஒரு சிலரும், மோசேக்கு முன் வாழ்ந்த யாராவது இருக்கலாம் என்று வேறு சிலரும் கருத்து தெரிவிக்கின்றனர்.

பின்னணி : ஏதோமுக்கும், அரேபியாவுக்கும் இடையே இருந்தது ஊத்ஸ் தேசம்.

முக்கிய மனிதர்கள் : யோபு, எலிப்பாஸ், பில்தாத், சோப்பார், எலிகூ

முக்கிய வசனம் : "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்". யோபு 13:15

மையக்கருத்து : துன்பம்.

நூல் பகுப்பு:

I. யோபுவின் துன்பங்கள்: அதிகாரங்கள் 1-2

1. யோபுவின் நற்குணங்கள் 1 : 1-5
   தேவனிடத்தில் சாத்தான் 1 : 6-12
   சாத்தானின் முதல் தாக்குதல் 1 : 13-22
2. சாத்தான் மீண்டும் தேவனிடத்தில் 2 : 1-6
   சாத்தானின் இரண்டாவது தாக்குதல் 2 : 1-10
   யோபுவின் நண்பர்களின் வருகை 2 : 11-13

II. யோபுவிற்கும் நண்பர்களுக்கும் நடந்த விவாதங்கள்: அதிகாரங்கள் 3-37

1. யோபுவின் முதல் உரை 3 : 1-26
2. எலிப்பாஸின் உரையும் யோபுவின் பதிலும் 4 : 1-5:27
3. பில்தாத்தின் உரையும், யோபுவின் பதிலடியும் 8 : 1-10:22
4. சோப்பாரின் உரையும், யோபுவின் பதிலும் 11 : 1-20
5. எலிப்பாஸின் இரண்டாம் உரையும், பதிலும் 15 : 17-16
6. பில்தாத்தின் உரையும், யோபுவின் பதிலடியும் 18 : 1-19:29
7. சோப்பாரின் இரண்டாம் உரையும், யோபுவின் பதிலும் 20 : 21-34
8. எலிப்பாஸின் மூன்றாம் உரையும், பதிலும் 22 : 1-24:45
9. பில்தாத்தின் உரையும், யோபுவின் பதிலும் 25 : 1-26:14
10. லேியாபுவின் இறுதி விவாதம் 27 : 31-40
11. எலிகூவின் பதிலுரை 32 : 1-37:24

III. யோபுவிற்குக் கிடைக்கும் விடுதலை: அதிகாரங்கள் 38-42

1. யோபுவிற்கு தேவனளிக்கும் பதில் 38 : 1-41:34
2. தன் அறியாமையை சம்மதித்து சுயநீதிக்காக மனம் வருந்துதல் 42 : 1-6

3. யோபுவிற்குக் கிடைத்த விடுதலை

(i) நண்பர்களுக்காக ஜெபித்தல் 42 : 7-10

(ii) இரட்டிப்பான ஆசீர்வாதங்களைத் திரும்பப் பெறுதல் 42 : 11-17

சில புள்ளி விபரங்கள்:

இந்த புத்தகத்தில் அதிகாரங்கள் 42, வசனங்கள் 1070 உள்ளன. வரலாற்றுத் தொடர்புடைய வசனங்கள் 1066, நிறைவேறிய தீர்க்கதரிசனம் 1, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 3, கேள்விகள் 329 கட்டளைகள் 13. வாக்குத்தத்தங்கள் இல்லை. எச்சரிக்கைகள் 4, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 10.

19. சங்கீதம்

இஸ்ரவேல் ஜனங்களின் வாழ்க்கை முறைகளிலிருந்து வேறுபட்ட ஜெப கீதங்களே சங்கீதம் என்னும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. சந்தோஷம், துக்கம், பயம், கலக்கம், ஆன்மீக ஆவிக்குரிய எண்ணம், எதிர்பார்ப்பு போன்ற பலவித உணர்வுகள் இதில் பிரதிபலிக்கப்பட்டுள்ளன. இசைக்கருவிகளைப் பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ இப்பாடல்களை ஆராதனையின்போது பாடும் விதத்தில் இவை அமைந்துள்ளன. தாவீது ராஜா தான் அனைத்து பாடல்களையும் இயற்றியுள்ளார் என்ற பொதுவான கருத்து நிலவி வந்தது. பெரும்பாலான பாடல்கள் தாவீதால் பாடப்பட்டது. எல்லா பாடல்களும் அவர் இயற்றியுள்ளார்.

எபிரெய மொழியில் இப்புத்தகத்திற்கு ஸ்தோத்திரங்கள் என்று அர்த்தம் வருகின்ற 'Techllim' என்ற பெயர் வழங்கப்பட்டள்ளது. ஸெப்டுவஜின்ட் மொழி பெயர்ப்பில் சங்கீதம் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது.

காலம் :

இந்த புத்தகத்தில் உள்ள 150 பாடல்கள் மோசே முதல் பாபிலோன் அடிமைத்தனத்தில் இருந்த பலர் எழுதியுள்ளனர்.

ஆசிரியர்களும் அவர்கள் எழுதிய சங்கீதங்களும்:

1.	மோசே	9, 10 சங்கீதம்
2.	தாவீது	2-41, 51-65, 68-70 86, 101, 103, 108-110 122, 124, 131, 133 138 - 145
3.	சாலொமோன்	72-127
4.	ஆசாப்	50, 73-83
5.	கோராகு புத்திரர்கள்	42-49, 84, 85, 87
6.	ஏமான்	88

7. ஏத்தான் | 89

8. பெயர் இல்லாதவை | 1, 66, 71, 91-100, 102-107, 111-121 123, 125, 126 128-130, 132 134-137, 146-150

சங்.102 ஒரு பாபிலோனிய அடிமையால் எழுதப்பட்டது என்றும், சங்.132 சாலொமோனால் எழுதப்பட்டது என்றும் கருதப்படுகிறது.

முக்கிய **மனிதர் : தாவீது**

முக்கிய **இடம் : தேவாலயம்**

முக்கிய **வசனம் :** "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக" சங். 19:14

முக்கிய **சங்கீதம் :** மேய்ப்பன் சங்கீதம் என்று அறியப்படுகிற 23-ம் சங்கீதம்

ஸ்தோத்திர **கீதங்கள் :**

கர்த்தரைத் துதிப்பதாக ஆரம்பிக்கும் சங்கீதங்கள் தான் ஸ்தோத்திர கீதங்கள்: 8, 19, 29, 33, 46, 47, 48, 76, 84, 87, 93, 96-100, 103-106, 113, 114, 117, 122, 135, 136, 145-150.

இயேசுவைக் குறித்ததான தீர்க்கதரிசனங்களை உள்ளடக்கியிருக்கும் சங்கீதங்கள்: 2, 18, 20, 21, 28, 45, 61, 63, 72, 89, 101, 132, 40, 41, 109, 22, 69, 110.

புலம்பல் **கீதங்கள் :**

சோதனைகள் வரும்போது தனியாகவோ அல்லது சமூகமாகவோ சேர்ந்து துக்கத்தோடு பாடும் பாடல். யுத்தத்தில் ஏற்படுகின்ற தோல்வி, பஞ்சம் போன்ற சந்தர்ப்பங்களில் இவை பாடப்பட்டுள்ளன. 12, 44, 60, 74, 79, 80, 83, 85, 106, 123, 129, 137

நோய், சத்துருக்களைக் கண்டு பயம், குற்றவுணர்வு போன்றவை தனிநபர் புலம்பல்கள் ஆகும். 3, 5-7, 13, 17, 22, 25, 26, 28, 31, 35, 38, 42, 43, 51, 54-57, 59-63, 64, 69, 71, 799, 86, 102, 140-143.

நன்றி கீதங்கள் :

யுத்தம், பஞ்சம், நோய் போன்ற ஆபத்திலிருந்து விடுதலை பெற்ற பின்னர் கர்த்தருக்கு நன்றி சொல்லும் விதத்தில் அமைந்துள்ளவை நன்றி கீதங்கள். 18, 21, 30, 33, 34, 40, 65-68, 92, 116, 118, 124, 129, 138, 144.

நூல் பகுப்பு:

I. மனிதனை மையமாகக் கொண்ட முதல் நூல்:

சாங்கீதங்கள் 1-41

1.	இரண்டு வழிகள்	1 : 1-6
2.	அபிஷேகம் பண்ணப்பட்டவன்	2 : 1-12
3.	கர்த்தரை நாடுதல்	3
4.	கர்த்தரிடத்தில் பாதுகாப்பு	4
5.	காலை ஜெபம்	5
6.	துக்கத்தில் புலம்பல்	6
7.	நியாயத்திற்காக ஜெபம்	7
8.	கர்த்தருடைய நாமத்தை மேன்மை பாராட்டுதல்	8
9.	எளியவனின் வேண்டுதல்	9
10.	நியாயத்திற்காக ஜெபம்	10
11.	நீதிமானின் புகலிடம்	11
12.	கபடு நிறைந்த உலகம்	12
13.	கர்த்தருடைய கருணையைத் தேடுகிறவர்	13
14.	அக்கிரமக்காரனின் மதிகேடு	14
15.	கர்த்தரின் கூடாரத்தில் தங்குபவன்	15

16. கர்த்தர் எனது உரிமை 16
17. கபடமில்லாதவனின் பிரதிபலன் 17
18. வெற்றிக்கான ஸ்தோத்திர பலி 18
19. பிரபஞ்சம் கர்த்தரை மகிமைப்படுத்துதல் 19
20. ராஜாவின் வெற்றிக்கான ஜெபம் 20
21. வெற்றி தந்த தேவனுக்கு நன்றி 21
22. தள்ளப்பட்டவனின் அழுகை 22
23. கர்த்தர் என் மேய்ப்பர் 23
24. மகிமையின் ராஜா 24
25. வழிகாட்டும் தெய்வம் 25
26. கபடமில்லாதவனின் ஜெபம் 26
27. கர்த்தரிடத்தில் புகலிடம் 27
28. கர்த்தரின் உதவி 28
29. கர்த்தரின் குரல் 29
30. நன்றி பாடல் 30
31. கர்த்தர் என் புகலிடம் 31
32. மன்னிக்கப்பட்டவனின் மகிழ்ச்சி 32
33. படைத்தவரும் பராமரிப்பவரும் 33
34. தேவ பாதுகாப்பு 34
35. நீதியை நடத்தும் தெய்வம் 35
36. ஜீவ ஊற்று 36
37. நீதிமானும், துன்மார்க்கனும் 37
38. நோயாளியின் அழுகை 38
39. மனிதன் நிழல் மட்டுமே 39
40. தாமதிப்பதில்லை 40
41. நோயில் விடுதலை 41

II. இஸ்ரவேல் மக்களை மையமாகக் கொண்ட இரண்டாம் நூல்: சங்கீதங்கள் 42-72

42. கர்த்தருக்கான தாகம் 42

43. ஆத்துமாவின் கலக்கம் 43

44. கர்த்தரால் எதிரி தோற்பான் 44

45. ராஜ விவாகம் 45

46. கர்த்தர் நம்மோடு 46

47. ஜாதிகள் மேல் அரசாளுகிறவர் 47

48. கர்த்தரின் நகரம் 48

49. உயிரின் விலை 49

50. உண்மையான ஸ்தோத்திர பலி 50

51. மனதுருகும் தெய்வம் 51

52. அக்கிரமக்காரரின் முடிவு 52

53. மூடனின் சிந்தனை 53

54. உதவி செய்யும் தெய்வம் 54

55. நண்பன் ஏமாற்றுதல் 55

56. பயமில்லாத புகலிடம் தெய்வம் 56

57. கர்த்தரின் செட்டைகளின்கீழ் 57

58. துன்மார்க்கரைப் பழிவாங்குதல் 58

59. கர்த்தர் என் பெலன் 59

60. தோற்கடிக்கப்பட்ட ஜனங்களின் புலம்பல் 60

61. கர்த்தர் என் துருகம் 61

62. கர்த்தரிடத்தில் ஆறுதல் 62

63. கர்த்தருக்கான தாகம் 63

64. துன்மார்க்கனின் ஆலோசனைகளை அவமாக்கும் ஜெபம் 64

65. பசுமையான வாழ்க்கை 65

66. கர்த்தரைத் துதிப்போம் 66
67. கர்த்தருடைய ரட்சிப்பின் வல்லமை 67
68. கர்த்தர் எழுந்தருள்வார் 68
69. பழிவாங்குதலின் அழுகை 69
70. கர்ததாவே தீவிரியும் 70
71. முதிர்ந்த வயதினனின் ஜெபம் 71
72. ராஜாவுக்கான ஜெபம் 72

III. தேவாலயத்தையும் ஜனங்களையும் மையமாகக் கொண்ட மூன்றாம் நூல்: 73-89

73. துன்மார்க்கனின் முடிவு 73
74. தேவாலயத்தின் அழிவு 74
75. தேவனே நியாயாதிபதி 75
76. வெற்றியின் தேவன் 76
77. வழிநடத்தும் தேவன் 77
78. சரித்திரம் சொல்லும் பாடம் 78
79. இஸ்ரவேலின் விடுதலை 79
80. எங்களைத் திருப்பி கொண்டுவாரும் என்ற விண்ணப்பம் 80
81. பண்டிகை பாடல் 81
82. கர்த்தர் நியாயாதிபதிகளின் நியாயாதிபதி 82
83. இஸ்ரவேலின் பகைவர்களை அழித்துவிடும்படி வேண்டுதல் செய்தல் 83
84. கர்த்தருடைய ஆலயத்தின் மேன்மை 84
85. புது வாழ்வு தருகின்ற தேவன் 85
86. ஆதரவற்றவனின் வேண்டுதல் 86
87. ஜனங்களின் தாயாகிய சீயோன் 87
88. துன்பப்படுகின்றவன் அழுகை 88
89. உடன்படிக்கையை நினைவுகூரும் தேவன் 89

IV. பூமியைப் பற்றிய நான்காம் நூல்: சங்கீதங்கள் 90-106

90. அநாதி தேவனும் அற்ப மனிதனும் 90
91. கர்த்தரின் பாதுகாப்பு 91
92. நீதிமானின் சந்தோஷம் 92
93. கர்த்தர் மகிமையானவர் 93
94. கர்த்தர் நியாயாதிபதி 94
95. கர்த்தரைத் துதிப்போம் 95
96. கர்த்தரே ராஜா, நியாயாதிபதி 96
97. பிரபஞ்சத்தின் தேவன் 97
98. பூமியை நியாயந்தீர்த்தல் 98
99. கர்த்தர் பரிசுத்தர் 99
100. கர்த்தர் நல்லவர் 100
101. ராஜாவின் உறுதிமொழி 101
102. நெருக்கப்பட்டவரின் ஜெபம் 102
103. ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி 103
104. படைத்தவருக்கான கீதம் 104
105. இஸ்ரவேலை வழிநடத்திய தேவன் 105
106. இஸ்ரவேலின் அவிசுவாசமும் கர்த்தரின் கருணையும் 106

V. தேவவசனத்தை மையமாகக் கொண்ட ஐந்தாம் நூல்: சங்கீதங்கள் 107-150

107. இரட்சிக்கப்பட்டவனின் நன்றி 107
108. கர்த்தரிடத்தில் உதவிக்காக வேண்டுதல் 108
109. கர்த்தர் பழிவாங்குகிறார் 109
110. ராஜாவின் பதவியேற்பு 110
111. அற்புதங்களின் தேவன் 111

112. கர்த்தரை நம்புகின்றவனின் சந்தோஷம் 112
113. கருணையின் தேவன் 113
114. எகிப்திலிருந்து புறப்பட்டது 114
115. கர்த்தரே தேவன் 115
116. கர்த்தருக்கு ஸ்தோத்திரபலி 116
117. கர்த்தரைத் துதியுங்கள் 117
118. வெற்றியைத் தந்த தேவனுக்கு நன்றி 118
119. கர்த்தரின் கட்டளை 119
120. கபடநாவிலிருந்து இரட்சித்தல் 120
121. கர்த்தர் என்னைக் காப்பவர் 121
122. எருசலேமின் நன்மை 122
123. கருணைக்காகக் காத்திருத்தல் 123
124. கர்த்தரின் நாமம் நம் இரட்சிப்பு 124
125. கர்த்தர் ஜனாங்களின் அரண் 125
126. திரும்பி வருகின்ற அடிமைகளின் கீதம் 126
127. எல்லாம் தேவனின் கொடை 127
128. கர்த்தருக்கு பயப்படுகிற மனிதனின் ஆசீர்வாதம் 128
129. சீயோனின் சத்துருக்களுக்கு எதிராக 129
130. ஆழங்களிலிருந்து கூப்பிடுகிறேன் 130
131. குழந்தையைப் போன்ற ஆத்துமா 131
132. தாவீதுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் 132
133. சகோதர ஐக்கியம் 133
134. இரவின் கீதம் 134
135. கர்த்தரைத் துதியுங்கள் 135
136. கர்த்தரின் கருணை 136

137. அடிமையின் அழுகை 137
138. துதி கீதம் 138
139. காண்கின்ற தேவன் 139
140. துன்மார்க்கரிடமிருந்து இரட்சிப்பு 140
141. மாலை ஜெபம் 141
142. தளர்ந்து போனவனின் ஜெபம் 142
143. கருணைக்காக ஜெபம் 143
144. கர்ததரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனம் 144
145. வாக்குத்தத்தத்தின் தேவன் 145
146. கர்த்தரே இரட்சகர் 146
147. சர்வ வல்லமையுள்ள தேவன் 147
148. வானமும் பூமியும் கர்த்தரைத் துதிக்கட்டும் 148
149. துதி கீதம் 149
150. எல்லா ஜாதிகளும் கர்த்தரைத் துதிக்கட்டும் 150

சில புள்ளி விபரங்கள்:

இந்த புத்தகததில் 150 அதிகாரங்களும் 2461 வசனங்களும் உள்ளன.வரலாற்றுத் தொடர்புடைய வசனங்கள 2027. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 160, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 272, கேள்விகள் 164, கட்டளைகள் 413, தேவசெயல்பாடுகள் 338. தீர்மானங்கள் 124, தேவதுதிகள் 174, குற்றம் சாட்டுதல்கள் (முறையீடுகள்) 118, யூதாவைக் குறித்தவை 72, தேவ சத்தியங்கள் 865, தேவ வசனம் பற்றியவை 235. சாட்சி அறிக்கைகள் 182, வாக்குத்தத்தங்கள் 97, மேசியாவைக் குறித்தவை 128, ஆசீர்வாதங்கள் 281, பாடலாசிரியர்களைக் குறித்தவை 190, நியாயச் செயல்கள் 78, தீயச்செயல்கள் 101, பாவங்கள் 233, விண்ணப்பங்கள் 582, விண்ணப்பக் காரணங்கள் 187.

20. நீதிமொழிகள்

தாவீதின் மகனும், இஸ்ரவேலின் ராஜாவுமான சாலொமோனின் நீதிமொழிகள் என்று தான் இப்புத்தகம் ஆரம்பிக்கிறது. வாலிபர்களையும், மூடர்களையும் கருத்தில்கொண்டே இது எழுதப்பட்டுள்ளது. ஞானியான மனிதன் வாழ்க்கையின் ஒவ்வொரு சூழலிலும் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்று இப்புத்தகம் கற்பிக்கிறது. ஆலயங்களில், சமூகத்தில், குடும்பத்தில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை இப்புத்தகம் விளக்குகிறது. தாழ்மை, பொறுமை, எளியவனோடு அன்பு, விசுவாசம், கணவன்-மனைவி உறவு போன்ற பல விஷயங்கள் இதில் எழுதப்பட்டுள்ளன. ஞானிகளுக்கும் மூடருக்குமிடையேயான வேறுபாடு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

காலம் :

கி.மு. 2-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஆசிரியர் :

இதிலுள்ள நீதிமொழிகள் சாலொமோன் சொன்னவை அல்லது சேகரித்தவையல்லாமல் ஆகூர் என்பவரும் லேமுவேல் என்ற ராஜாவும் எழுதியிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இவர்கள் யார் என்பது தெரியவில்லை.

மையக்கருத்து : தேவ பக்தி

பின்னணி : முழுஞானமுள்ள சிந்தனைகளால் தேவபக்தியுடன் எப்படி வாழமுடியுமென்று கற்றுக்கொடுக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

நூல் சிறப்பு : கவிதை வடிவம், சிறு உவமைகள், நோக்கம் நிறைந்த கேள்விகள், ஈரடிகள் ஆகிய இலக்கிய உத்திகளும் விரோத அணி, இடித்துரைப்பு முறை போன்ற நயங்களும் காணப்படுகின்றன.

முக்கிய வசனம் : "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து

உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்;

அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்". நீதி 3:5,6

முக்கிய சொல் : ஞானம்

மையக்கருத்து : தேவ பக்தி

பிரிவுகள் :

1. ஞான கீர்த்தனை
2. சாலொமோனின் நீதிமொழிகள்
3. ஆகூரின் வார்த்தைகள்
4. பலவித அறிவுரைகள்

நூல் பகுப்பு:

I. புத்தகத்தின் நோக்கமும், இளைஞர்களுக்கான அறிவுரைகளும்: அதிகாரங்கள் 1-8

1.	புத்தகத்தின் நோக்கம்	1 : 1-7
2.	ஞானத்தின் பலன்கள்	2 : 1-22
3.	கர்த்தரிடம் விசுவாசம்	3 : 1-12
	ஞானம் விலையேறப்பெற்றது	3 : 13-35
4.	ஞானத்தை சம்பாதித்தல்	4 : 1-27
5.	பரஸ்திரீயிடம் கவனம்	5 : 1-23
6.	பலவித அறிவுரைகள்	6 : 1-35
7.	பலவித அறிவுரைகள்	7 : 1-27
8.	ஞானம் - கர்த்தரின் கொடை	8 : 1-36

II. எல்லா மக்களுக்குமான போதனை: அதிகாரங்கள் 9-24

9.	ஞானியும் சொற்ப மதியீனமும்	9 : 1-18
10.	சாலொமோனின் நீதிமொழிகள்	10 : 1-32
11.	உண்மை	11 : 1-31
12.	பலவித அறிவுரைகள்	12 : 1-28

13. பலவித அறிவுரைகள் 13 : 1-25
14. பலவித அறிவுரைகள் 14 : 1-33
15. பலவித அறிவுரைகள் 15 : 1-33
16. பலவித அறிவுரைகள் 16 : 1-33
17. பலவித அறிவுரைகள் 17 : 1-28
18. பலவித அறிவுரைகள் 18 : 1-24
19. பலவித அறிவுரைகள் 19 : 1-29
20. பலவித அறிவுரைகள் 20 : 1-30
21. பலவித அறிவுரைகள் 21 : 1-31
22. பலவித உபதேசங்கள் 22 : 1-16
ஞானிகளின் வார்த்தைகள் 22 : 17-29
23. பலவித அறிவுரைகள் 23 : 1-35
24. பலவித அறிவுரைகள் 24 : 1-34

III. எசேக்கியா தொகுத்த நீதிமொழிகள்: அதிகாரங்கள் 25-29

25. பலவித அறிவுரைகள் 25 : 1-28
26. பலவித அறிவுரைகள் 26 : 1-28
27. பலவித அறிவுரைகள் 27 : 1-27
28. பலவித அறிவுரைகள் 28 : 1-28
29. பலவித அறிவுரைகள் 29 : 1-27

IV. ஆகூர் மற்றும் லேமுவேலின் வசனங்கள்: அதிகாரங்கள் 30,31

30. ஆகூரின் நீதிமொழிகள் 30 : 1-33
31. லேமுவேலின் நீதிமொழிகள் 31 : 1-9
குணசாலியான ஸ்திரீ 31 : 10-31

சில புள்ளி விபரங்கள்:

இந்த புத்தகத்தில் 31 அதிகாரங்களும் 915 வசனங்களும் உண்டு. கேள்விகள் 49, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 67, பாவங்கள் 27, மூடர்கள் குறித்தவை 66, சோம்பலைப் பற்றியவை 28, இராஜாக்களைப் பற்றியவை 22, சீரழிவுகள் 25, கட்டளைகள் 215, வாக்குத்தத்தங்கள 120, ஆசீர்வாதங்கள் 27 வாழ்வுப்புதிர்கள் 24, நற்செயல்கள் 17, நிதிமொழிகள் 560.

21. பிரசங்கி

இது சாலொமோன் எழுதியது என்று கூறப்படுகிறது. ஆனால் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏதோ யூத சிந்தனையாளர் எழுதியிருக்கலாம் என்பது பொதுவான கருத்து. கிரேக்க தத்துவ சிந்தனையின் தாக்கம் இதில் உள்ளது.

எபிரெய மொழியில் பிரசங்கி என்று அர்த்தம் வருகின்ற கொஹேலேத் என்ற பெயர் இந்த புத்தகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் : சாலொமோன்

காலம் : ஏறக்குறைய கி.மு. 935ல் எழுதப்பட்டது.

முக்கிய சொல் : மாயை

முக்கிய அதிகாரம் : 12

மையக்கருத்து :

சூரியனுக்குக் கீழே நடப்பது எல்லாமும், இந்த உலகமும், இதில் உள்ள அனைத்தும், சம்பாத்தியங்களும், சுகங்களும், எல்லாம் மாயை என்ற சிந்தனையே இதன் மையக்கருத்து.

குறிப்பு வசனம் : 12 : 13

"காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே". பிர. 12 : 13.

குறிப்பு : மாயை

நூல் பகுப்பு:

I. எல்லாம் மாயை என்ற கொள்கை: அதிகாரம் 1

1. எல்லாம் மாயை 1 : 1-18

II. மாயை கொள்கையின் ஆதாரங்கள்: அதிகாரங்கள் 2-6

2. சுகபோகங்கள் 2 : 1-11

ஞானமும் மாயை 2 : 12-26

3.	எல்லாவற்றிற்கும் காலமுண்டு	3 : 1-15
	எங்கும் அநீதி	3 : 16-22
4.	நிம்மதி, உத்தமம்	4 : 1-16
5.	தேவ பக்தி	5 : 1-7
	ஏழ்மையும் ஐசுவர்யமும்	5 : 8-20
6.	கண்முன்னால் இருப்பதில் திருப்தி	6 : 1-12

III. மாயையை வென்று வாழ போதனை: அதிகாரங்கள் 7-12

7.	பலவித சிந்தனைகள்	7 : 1-29
8.	ஞானியும் ராஜாவும்	8 : 1-17
9.	ஞானியும் மூடனும்	9 : 1-18
10.	செத்த ஈக்கள்	10 : 1-20
11.	விவேகத்தோடு செயல்படுங்கள்	11 : 1-28
	இளமையும் முதுமையும்	11 : 9-10
12.	காலத்தின் மாற்றம்	12 : 1-8
	முடிவுரை	12 : 9-14

சில **புள்ளி விபரங்கள்:**

இந்த புத்தகத்தில் 12 அதிகாரங்களும் 222 வசனங்களும் உண்டு. கேள்விகள் 33, கட்டளைகள் 34, தீர்க்கதரிசனங்கள், வாக்குத்தத்தங்கள், தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் இல்லை.

22. உன்னதப்பாட்டு

காதல் கொண்ட ஆணும் பெண்ணும் தங்களுக்குள் பேசிக் கொள்வது போல் அமைந்தது இப்புத்தகம். இதில் ஆறு பாடல்கள் உள்ளன. கிறிஸ்துவுக்கும் சபைக்குமிடையேயான உறவைக் குறிப்பதாக ஆதிக்கிறிஸ்தவர்கள் விளக்கமளிக்கின்றனர்.

பாடல்களின் பாடல் என்று அர்த்தம் வருகின்ற எபிரெய பெயர் இந்த புத்தகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இலத்தீன் மொழியில் அதே அர்த்தம் வருகின்ற canticles என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் :

சாலொமோன் ராஜா என்ற கருத்தே பொதுவாக உள்ளது. என்றாலும் இஸ்ரவேலின் பாபிலோன் அடிமைத்தனத்திற்குப் பிறகு எழுதப்பட்டது என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

காலம் : சுமார் கி.மு. 965

முக்கிய சொல் : நேசம்

முக்கிய வசனம் வசனம் :

"திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்க மாட்டாது, வெள்ளங்களும் அதைத் தணிக்கமாட்டாது; ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும், அது முற்றிலும் அசட்டைபண்ணப்படும்". உன். 8 : 7.

நூல் பகுப்பு:

I. நேசத்தின் தொடக்கம்:	**1: 1-3:5**
1. மணமகளின் நேசத்துக்கான விருப்பம்	1:1-8
2. ஒருவருக்கொருவர் நேசத்தை வெளிப்படுத்துதல்	1:9-2:7
3. ராஜா மணமகளின் வீட்டில்	2:8-17
4. மணமகளின் பிரிவுகனவு	3:1-5
II. நேசம் திருமணத்தில் கைகூடுகிறது:	**3:6-5:1**
1. திருமண ஊர்வலம்	3:6-11

2. மணமகளின் அழகுச்சிறப்பு 4:1-15

3. திருமண இன்பம் 4:16-5:1

III. நேசத்தின் வளர்ச்சி: 5:2-8:16

1. மணமகளின் இரண்டாவது பிரிவுகனவு 5:2-7

2. மணமகனின் அழகுச்சிறப்பு 5:8-6:3

3. மணமகளின் அழகு புகழப்படுதல் 6:4-7:10

4. தனது வீட்டிற்குச் செல்ல மணமகள் உரிமைவாதம் 7:11-8:4

5 பயணம் செய்து வீட்டை அடைதல் 8:5-14

சில **புள்ளி விவரங்கள்:**

இந்த புத்தகத்தில் 8 அதிகாரங்களும் 117 வசனங்களும் உள்ளன. கேள்விகள் 13, கட்டளைகள் 14. தீர்க்கதரிசனங்கள், தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் இல்லை.

தீர்க்கதரிசன புத்தகங்கள்

சிறிய தீர்க்கதரிசிகள், பெரிய தீர்க்கதரிசிகள் என இரண்டு பிரிவுகளுக்குட்பட்ட 16 தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட 17 புத்தகங்கள் தீர்க்கதரிசன புத்தகங்கள் எனப்படும். கி.மு.800-400 வரையுள்ள காலக் கட்டத்தில்தான் தீர்க்கதரிசன புத்தகங்கள் எழுதப்பட்டது. தீர்க்கதரிசிகள் வாழ்ந்த காலத்தின் அடிப்படையில் அவர்களை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. பாபிலோன் அடிமைத்தனத்திற்கு முன்

ஏசாயா, எரேமியா, ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா

2. பாபிலோன் அடிமைத்தனத்தின் போது

எசேக்கியேல், தானியேல்

3. அடிமைத்தனத்திற்குப் பிறகு

ஆகாய், சகரியா, மல்கியா

தீர்க்கதரிசிகளும், அவர்களுடைய செய்திகளும்:

1.	ஆமோஸ்	-	இஸ்ரவேலுக்கு
2.	யோனா, நாகூம்	-	நினிவேக்கு
3.	தானியேல்	-	பாபிலோனுக்கு
4.	எசேக்கியேல்	-	பாபிலோன் அடிமைகளுக்கு
5.	ஒபதியா	-	ஏதோமுக்கு
6.	யோவேல், ஏசாயா, எரேமியா, ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா	-	யூதாவுக்கு

23. ஏசாயா

கி.மு. 8-ஆம் நூற்றாண்டின், இரண்டாம் பகுதியில் (740-700) தீர்க்கதரிசன ஊழியத்தில் ஈடுபட்டிருந்தவர் ஏசாயா. இக்காலகட்டத்தில் தான் உசியா, யோதாப், ஆகாஸ், எசேக்கியா, போன்றவர்கள் யூதாவை ஆட்சி செய்தனர்.

முதல் 33 அதிகாரங்களில் ஏசாயாவின் செயல்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் அதிகாரங்களும் அவை எழுதப்பட்ட காலக் குறிப்புகளையும் வைத்து பார்க்கும் போது அவை ஏசாயாவால் எழுதப்பட்டதல்ல என்று தோன்றுகிறது. ஆசிரியர் யார் எனத் தெரியாவிட்டாலும் 40-55 வரையிலான அதிகாரங்கள் இரண்டாம் ஏசாயா என்றும் 56-66 வரையுள்ள அதிகாரங்கள் மூன்றாம் ஏசாயா என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் ஏசாயா பாபிலோன் அடிமைத்தனத்தில் இருப்பவர்களையும், மூன்றாம் ஏசாயா அடிமைத்தனம் முடிந்து எருசலேமுக்கு வந்தவர்களையும் குறிக்கிறது.

பலமான தெய்வீக அனுபவத்தோடு இப்புத்தகம் தொடங்குகிறது. யூதர்களின் அரசியல் செயல்பாடுகளோடு தொடர்புபடுத்தி எழுதப் பட்டள்ளது. சோதனைகளைக்கண்டு பயப்படாமல் கர்த்தருக்குள் விசுவாசமாயிருந்து தைரியப்பட வேண்டுமென்று மீண்டும் சொல்லப் பட்டுள்ளது. தீர்க்கதரிசியின் அறிவுரையைக்கேளாத ராஜாக்கள் தோல்வியைச் சந்தித்தனர். மீறுதலின் விளிம்புக்குச் சென்ற யூதாவுக்கும், எருசலேமுக்கும் ஆறுதலாக இம்மானுவேல் (இயேசு கிறிஸ்து) 40-55 வரையிலான அதிகாரங்களில் நிலைத்து நிற்கிறார். சத்தியமும், நீதியும், உண்மையான ஆராதனையும் இருக்க வேண்டும். அப்படியாக புதிய வானமும் புதிய பூமியும் ஸ்தாபிக்க வேண்டும்.

எழுத்தாளர் : ஆமோஸின் குமாரனான ஏசாயா

காலம் : 1 - 39 அதிகாரங்கள் கி.மு. 700-லும், 40-66 அதிகாரங்கள் கி.மு. 681-லும் எழுதப்பட்டவையாக இருக்கலாம்.

முக்கிய மனிதர்கள் : ஏசாயா, அவரது இரண்டு குமாரர்களான சேயார் - யாசூப், மகேர் - சாலால் - அஷ்பாஸ் ஆகியோர்

முக்கிய சொல் : இரட்சிப்பு

முக்கிய வசனம் :

"நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்". ஏசாயா 53 : 6.

முக்கிய அதிகாரம் : ஏசாயா 53

நூல் பகுப்பு:

I. நியாயத்தீர்ப்பு பற்றி தீர்க்கதரிசனம்: அதிகாரங்கள் 1-35

1.	ஜனங்களின் அக்கிரமங்கள்	1 : 1-31
2.	இரட்சிப்பின் உறைவிடம்	2 : 1-5
	கர்த்தரின் நாள்	2 : 6-22
3.	எருசலேமின் அநீதி	3 : 1-12
	கர்த்தரின் நியாயத்தீர்ப்பு	3 : 12-15
	சீயோன் குமாரத்திகளுக்கு எச்சரிக்கை	3 : 15-26
4.	தாவீது அரசனைக் குறித்த தரிசனம்	4 : 1-6
5.	திராட்சத்தோட்ட உவமை	5 1-7
	அக்கிரமக்காரர்களின் துன்பம்	5 : 8-30
6.	ஏசாயாவின் தரிசனம்	6 : 1-13
7.	இம்மானுவேல் தீர்க்கதரிசனம்	
	இயேசு கன்னிகையிடம் பிறப்பார்	7 : 1-25
8.	ஆசூர் ராஜாவின் தாக்குதல் முன்னறிவிப்பு	8 : 1-22
9.	இஸ்ரவேலின் எதிர்பார்ப்பு (இயேசு)	9 : 1-7
	இஸ்ரவேலின் தண்டனை	9 : 8-21
10.	உபத்திரவங்களின் காலத்தில் யூதா	10 :1-34
11.	தாவீதின் சிங்காசனம்	11 : 1-9
	அரசர் நீதியோடு ஆட்சி செய்வார்	11 : 10-16

12.	ஸ்தோத்திரப்பாடல் பாடுவார்கள்	12 : 1-6
13.	பாபிலோனைக் குறித்த தீர்க்கதரிசனம்	13 : 1-22
14.	பெலிஸ்திய தேசத்தைக் குறித்த தீர்க்கதரிசனம்	14 : 1-23
15.	மோவாபைக் குறித்த தீர்க்கதரிசனம்	15 : 1-9
16.	மோவாபைக் குறித்த தீர்க்கதரிசனம்	16 : 1-14
17.	தமஸ்குவைக் குறித்த தீர்க்கதரிசனம்	17 : 1-14
18.	எத்தியோப்பியாவைக் குறித்த தீர்க்கதரிசனம்	18 : 1-7
19.	எகிப்தைக் குறித்த தீர்க்கதரிசனம்	19 : 1-25
20.	எகிப்தைக் குறித்த தீர்க்கதரிசனம்	20 : 1-6
21.	பாபிலோனின் தீர்க்கதரிசனம்	21 : 1-17
22.	தரிசனப் பள்ளத்தாக்கின் தீர்க்கதரிசனம்	22 : 1-25
23.	தீருவைக் குறித்த தீர்க்கதரிசனம்	23 : 1-13
24.	பூமியின்மேலுள்ள கர்த்தரின் நியாயத்தீர்ப்பு	24 : 1-12
	யூதா	24 : 13-15
	மிகுந்த உபத்திரவம்	24 : 16-23
25.	வரப்போகும் ராஜ்யத்தின் மகிமை	25 : 1-12
26.	இரட்சிக்கப்பட்ட இஸ்ரவேலின் சாட்சி	26 : 1-19
27.	பொது நியாயத்தீர்ப்பு	27 : 1-13
28.	எப்பிராயீமின் துன்பம்	28 : 1-6
	ஆசாரியர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் எச்சரிக்கை	28 : 7-22
29.	எருசலேமுக்கும் யூதாவுக்கும் தண்டனை	29 : 1-24
30.	எகிப்தில் உதவி தேடுபவர்கள்	30 : 1-33
31.	நீதியின் அரசாட்சி - பாதுகாப்பு	31 : 1-9
32.	நீதியின் அரசாட்சி	32 : 1-20

33. உதவிக்கான வேண்டுதல் 33 : 1-24
34. ஏதோமின் அழிவு 34 : 1-17
35. இஸ்ரவேல் சீயோனுக்குத் திரும்பிவருதல் 35 : 1-10

II. வரலாற்று நிலையான ஒரு பின்னிணைப்பு: அதிகாரங்கள் 36-39

36. ஆசூர் அரசனின் ஆக்கிரமிப்பு 36 : 1-22
37. எசேக்கியாவின் ஜெபமும் ஏசாயாவின் செய்தியும் 37 : 1-38
38. எசேக்கியாவுக்கு நோயிலிருந்து விடுதலை 38 : 1-22
39. பாபிலோனிய அடிமைத்தனத்தைக் குறித்த எச்சரிக்கையும், எசேக்கியாவின் புத்தியீனமும் 39 : 1-8

III. மகிமைநிறை நம்பிக்கையின் தீர்க்கதரிசனம்: அதிகாரங்கள் 40-66

(40 முதல் 66 வரையிலான அதிகாரங்கள் இதுவரையுள்ளவற்றை விட வித்தியாசமானது. இதன் முக்கிய அம்சங்கள் இயேசு கிறிஸ்துவின் பாடுகள், இஸ்ரவேலரின் எதிர்கால மேன்மை எதிர்பார்ப்பு)

40. ஜனங்களுக்கு ஆறுதல் 40 : 1-11
ஒப்பற்ற தேவன் 40 : 12-31
41. விடுதலை 41 : 1-29
42. கர்த்தரின் குமாரன் மேசியா 42 : 1-7
தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் 42 : 8-25
43. இஸ்ரவேலின் வருகை 43 : 1-21
நன்றி கெட்ட மக்கள் 43 : 22-38
44. கர்த்தரே தேவன் 44 : 1-28
45. கர்த்தர் கோரேசை அனுப்பினார் 45 : 18-25
46. அந்நிய தேவர்களின் அழிவு 46 : 1-13
47. பாபிலோனின் அழிவு 47 : 1-15
48. இஸ்ரவேலுக்கான வாக்குத்தத்தங்கள் 48 : 1-22

49.	மீட்பு	49 : 1-26
50.	பரிசுத்த சந்ததியின் தாழ்வு	50 : 1-11
51.	இஸ்ரவேல் மீட்கப்படுதல்	51 : 1-23
52.	அன்றைய எருசலேமின் நிலை	52 : 1-15
53.	கர்த்தரின் குமாரனின் பாடுகள்	53 : 1-12
54.	புதுப்பிக்கப்பட்ட இஸ்ரவேல்	54 : 1-17
55.	கர்த்தருடைய நித்திய இரட்சிப்பு	55 : 1-13
56.	உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள்	56 : 1-8
	தலைவர்களின் எச்சரிப்பு	56 : 9-12
57.	நீதிமானின் அழிவு	57 : 1-21
58.	உண்மையான உபவாசம்	58 : 1-14
59.	இஸ்ரவேலின் பாவத்திற்கான தண்டனைக்குப் பிறகு சீயோன் விடுவிக்கப்படும்	59 : 1-21
60.	எருசலேமின் எதிர்கால மகிமை	60 : 1-28
61.	இஸ்ரவேலின் மனந்திரும்புதல்	61 : 1-11
62.	சீயோனின் நீதி	62 : 1-12
63.	கர்த்தரின் பழிவாங்குதல்	63 : 1-19
64.	கர்த்தரே எங்கள் பிதா	64 : 1-12
65.	புதிய பூமியில் இஸ்ரவேலுக்கான ஆசீர்வாதம்	65 : 1-16
	புதிய வானமும் புதிய பூமியும்	65 : 17-25
66.	உண்மையான பக்தியும் புதிய ஜனமும்	66 : 1-24

சில புள்ளி விவரங்கள் :

இந்த புத்தகத்தில் 66 அதிகாரங்களும், 1292 வசனங்களும் உள்ளன. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள 395, எச்சரிக்கைகள் 1313, நிறைவேறிய எச்சரிக்கைகள் 449, நிறைவேறாத எச்சரிக்கைகள் 864, வரலாற்று வசனங்கள 273, கேள்விகள் 190, வாக்குத்தத்தங்கள் 120, கட்டளைகள் 308, தேவனிடமிருந்து சிறப்புச் செய்திகள் 71.

24. எரேமியா

கி.மு. 626-ல் எரேமியா தீர்க்கதரிசி தன்னுடைய தீர்க்கதரிசன வேலையை ஆரம்பித்தார். பிடுங்கியெறியவும், நடவும், உருவாக்கவும் அழிக்கவும் எரேமியாவின் தீர்க்கதரிசனம் உதவியாக இருந்தது. அந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிய காரணத்தினால் அநேக சித்திரவதைகளை மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் அனுபவித்தவர் எரேமியா. சொந்த ஜனங்களிடம் சொல்ல வேண்டிய கடுமையான நியாயத்தீர்ப்பை நினைத்து மனம் வருந்தினாலும் உள்ளுக்குள் எரிந்து கொண்டிருந்த தேவனுடைய உந்துதல் காரணமாக ஏற்றுக்கொண்டு அதன்படி செய்தார். தேவாலயத்தின் அழிவு, ராஜாக்கள், ஆசாரியர்களின் அழிவு, குற்றவாளிகளான ஜனங்கள் போன்றவற்றைக் குறித்து தீர்க்கதரிசனம் கூறினார்.

கர்த்தர் எருசலேமைப் புறக்கணித்ததாக சொல்லி இருந்தாலும் இரக்கம் காண்பிப்பார் என்று எரேமியா விசுவாசித்தார். தான் உரைத்த தீர்க்கதரிசனங்களெல்லாம் நிறைவேறிக் கொண்டிருப்பதை எரேமியா கண்டார். கவலையோடிருந்த எரேமியா அடிமைகளோடு பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட வில்லையென்றாலும் எகிப்திற்குக் கடத்தப்பட்டதாக சொல்லப்படுகிறது. அங்குதான் எரேமியா இறந்தார். எரேமியா புலம்பல் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறார். ஏசாயாவுக்குப் பிறகு 60 வருடங்களுக்குப் பின்னரே எரேமியாவின் ஊழியம் ஆரம்பமானது.

ஆசிரியர் :

எரேமியாவின் புத்தகத்தில் சில பகுதிகள், அவர் சொல்லிக் கொடுக்க அவருடைய சீஷன் பாருக் எழுதியது. மீதி பகுதிகள் பல சீஷர்கள் சேகரித்தவை.

பிறப்பிடம் :

எருசலேமிலிருந்து ஏறக்குறைய மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள வடகிழக்குப் பகுதியான ஆனதோத் என்ற கிராமத்தில் இல்க்கியா என்னும் ஆசாரியனின் மகனாக பிறந்தவர் எரேமியா.

காலம் : கி.மு. 627 - 586

பின்னணி : யோசியா, யோவாகாஸ், யோயாக்கீம், யோயாக்கீன், சிதேக்கியா ஆகிய ஐந்து யூதாவின் இறுதி ராஜாக்களின் காலத்திலும் எரேமியா தீர்க்கதரிசன ஊழியத்தை நிறைவேற்றினார். பாபேல் அரசர் கி.மு. 586-ல் யூதாவை முற்றிலும் அழித்தார். செப்பனியா எரேமியாவின் முன்னோடியும், ஆபகூக் எரேமியாவின் சமகாலத்தவருமாவார்.

முக்கிய மனிதர்கள் : யோசியா, யோவாகாஸ், யோயாக்கீம், யோயாக்கீன், சிதேக்கியா ஆகிய யூதாவின் ராஜாக்கள், பாரூக், எபேத்மெலேக், நேபுகாத்நேச்சார், ரேகாபியர்

முக்கிய வசனம்:

"என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்.

அவர்களோ அதைக் கேளாமலும் தங்கள் செவியைச் சாயாமலும்போய், தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனைகளின்படியும், கடினத்தின்படியும் நடந்து முன்னிட்டல்ல பின்னிட்டே போனார்கள்". எரே. 7 : 23,24

முக்கிய அதிகாரம் : 31

நூல் பகுப்பு:

I. **எரேமியா அழைக்கப்படுதலும், யூதர்களுக்கு தீர்க்கதரிசனமும்:**
அதிகாரங்கள் 1-45

1. எரேமியாவுக்கு தேவ அழைப்பு — 1 : 1-19
2. இஸ்ரவேலுக்கான தேவ செய்தி — 2 : 1-37
3. மனந்திரும்புதலுக்கான அழைப்பு — 3 : 1-25
4. வடகிழக்கு மிரட்டல் — 4 : 1-18
   எரேமியாவின் கவலை — 4 : 19-22
   வரப்போகும் தண்டனை — 4 : 23-31

5.	எருசலேமின் பாவம்	5 : 1-31
6.	சத்துருவின் போராட்டம்	6 : 1-30
7.	தேவாலய வாசலில் பிரசங்கம்	7 : 1-15
	ஆராதனையின் ஒழுங்குகள்	7 : 16-34
8.	பாவமும், தண்டனையும் எரேமியாவின் கவலையும்	8 : 1-22
9.	யூதாவின் பாவங்கள்	9 : 1-26
10.	விக்கிரகங்களும், தெய்வமும், அடிமைத்தனமும்	10 : 1-25
11.	மறுதலிக்கப்பட்ட உடன்படிக்கை	11 : 1-23
12.	துன்மார்க்கனின் ஐசுவரியம்	12 : 1-17
13.	சணல்கச்சை அடையாளம்	13 : 1-27
14.	பஞ்சத்தின் செய்தி	14 : 1-22
15.	யூதாவின் அழிவு	15 : 1-21
16.	விவாகம்பண்ணாத தீர்க்கதரிசி	16 : 1-21
17.	யூதாவின் பாவம்	17 : 1-4
	தேவ செய்திகள்	17 : 5-18
	ஓய்வுநாள் ஆசரிப்பு	17 : 19-27
18.	குயவனின் வீட்டில்	18 : 1-12
	தேவனை மறந்த ஜனம்	18 : 13-17
	பழிவாங்க ஜெபம்	18 : 18-23
19.	எரேமியாவின் மிரட்டல்	19 : 1-15
20.	எருசலேம் அழிக்கப்படும் எரேமியாவின் புகார்	20 : 1-18
21.	எருசலேம் ராஜாக்களின் தண்டனை	21 : 1-14
22.	அடிமைத்தனத்தைக் குறித்த தீர்க்கதரிசனம்	22 : 1-30

23. வரவிருக்கும் அரசர் 23 : 1-8
கள்ளத்தீர்க்கதரிசிகள் 23 : 9-40
24. இரண்டு கூடை அத்திப்பழம் 24 : 1-10
25. 70 வருட அடிமைத்தனம் 25 : 1-14
26. கர்த்தருடைய ஆலய வளாகத்தில் உள்ள செய்தி 26 : 1-24
உரியாவின் மரணம்
27. பாபிலோன் அடிமைத்தனம் 27 : 1-22
28. எரேமியாவும் அனனியாவும் 28 : 1-17
29. அடிமைகளுக்கான கடிதம் 29 : 1-32
30. இஸ்ரவேல் மிரட்டப்படுதல் 30 : 1-24
31. இஸ்ரவேலின் வருகை 31 : 1-40
32. அனாமெயேலின் நிலத்தின் அடையாளம் 32 : 1-44
33. தாவீதின் சிங்காசனத்தைக் குறித்த
தீர்க்கதரிசனம் 33 : 1-26
34. அடிமைத்தனத்தைக் குறித்தச்செய்தி
(சிதேக்கியா) 34 : 1-22
35. ரேகாபியரின் கீழ்ப்படிதல் 35 : 1-19
36. புத்தகச்சுருளை எரித்தல் 36 : 1-32
37. எரேமியாவைக் காவலில் வைத்தல் 37 : 1-21
38. எரேமியா கிணற்றில் 38 : 1-28
39. அடிமைத்தனத்திற்கு நேராக யூதா 39 : 18
40. இஸ்ரவேலுக்கு தீர்க்கதரிசனம் 40 : 1-16
41. எரேமியாவின் தீர்க்கதரிசனம் 41 : 1-18
42. எகிப்துக்குப்பயணம் 42 : 1-22
43. எரேமியாவை எகிப்துக்குக் கொண்டு செல்லுதல் 43 : 1-13
44. எகிப்திலுள்ள யூதர்களுக்குச் செய்தி 44 : 1-30

45. பாராக் செய்தி 45 : 1-5

II. புறஜாதி நாடுகளுக்கு தீர்க்கதரிசனம்: அதிகாரங்கள் 46-51

46. எகிப்திற்கு எதிரான தீர்க்கதரிசனம் 46 : 1-28

47. பெலிஸ்தியருக்கு எதிரான தீர்க்கதரிசனம் 47 : 1-7

48. மோவாப்பிற்கு தீர்க்கதரிசனம் 48 : 1-47

49. அம்மோனியருக்கான தீர்க்கதரிசனம் 49 : 1-6

ஏதோமிற்கு தீர்க்கதரிசனம் 49 : 7-22

தமஸ்குவிற்கு எதிரான தீர்க்கதரிசனம் 49 : 22-27

கேதார் காத்சோர் 49 : 28-33

ஏலாமுக்கு தீர்க்கதரிசனம் 49 : 34-39

50. பாபிலோன் கல்தேயருக்கான தீர்க்கதரிசனம் 50 : 1-46

51. யூதாவின் அழிவும், அடிமைத்தனமும் 51 : 1-64

III. இஸ்ரவேலின் அழிவும் சிறைவாசமும்: அதிகாரங்கள் 52

52. தேவாலயம் நெருப்புக்கு இரையாதல் 52 : 1-34
ஜனங்கள் அடிமைகளாக, யோயாக்கீனின் விடுதலை

சில புள்ளி விவரங்கள்:

இந்த புத்தகத்தில் 52 அதிகாரங்களும் 1384 வசனங்களும் உண்டு. வரலாற்று வசனங்கள் 680, நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் 666, நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் 180, எச்சரிக்கைகள் 1002, நிறைவேறிய எச்சரிக்கைகள் 779, நிறைவேறாத எச்சரிக்கைகள் 223, கேள்விகள் 194, கட்டளைகள் 303, வாக்குத்தத்தங்கள் 16, தேவனிடமிருந்து சிறப்புச்செய்திகள் 62.

25. புலம்பல்

எரேமியா புத்தகத்தின் ஒரு பகுதியாக இந்த புத்தகம் கருதப்பட்டிருந்தாலும் இன்று இது ஒரு வித்தியாசமான புத்தகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எருசலேம் தேவாலயம் எரிக்கப்பட்டதாலும், பலிகள் இல்லாததாலும், தலைவர்கள் நாடுகடத்தப்பட்டதாலும் கொண்ட துக்கத்தால் பாடப்பட்டவை. எருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டதன் துன்பத்தை வெளிப்படுத்துவதாக இப்புத்தகம் அமைந்திருந்தாலும், கர்த்தர் மீது கொண்ட விசுவாசத்தையும் வெளிப்படுத்துகின்றது. தங்களுடைய அக்கிரமங்கள் காரணமாகவே இவ்வாறு நடந்ததென்பதைக் ஜனங்கள் ஒத்துக் கொண்டனர். கர்த்தரின் இரக்கத்துக்காக மன்றாடினார்கள். கர்த்தரின் மணவாட்டியாம் எருசலேமை கர்த்தர் மீண்டும் ஏற்றுக் கொள்வார் என்ற எதிர்பார்ப்பு இப்புத்தகத்தில் காணப்படுகிறது.

ஆசிரியர் :

இதனுடைய ஆசிரியர் எரேமியாவே என்று பலர் கூறுகின்றனர். இதற்கான அகச்சான்றுகள் மற்றும் புறச்சான்றுகள் அநேகம் உள்ளன.

காலம் : கி.மு. 588 முதல் 586 வரை நேபுகாத்நேச்சாரின் படை எருசலேமை முற்றுகையிட்டிருந்தது. கி.மு. 586 ஆகஸ்ட் மாதத்தில் இந்நகரம் அழிக்கப்பட்டது. யூதாவில் நடந்த இந்நிகழ்ச்சிக்கும் மீதியான மக்கள் எரேமியாவைத் தங்களுடன் அழைத்துச் செல்வதற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்நூல் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

முக்கிய சொல் : துக்கம்

முக்கிய வசனம் :

"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை,

அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது". புலம். 3:22,23

முக்கிய அதிகாரம் : 3

நூல் பகுப்பு:

I. எருசலேமின் அழிவு:

* அடிமைத்தனத்திற்குக் கொண்டுச்செல்லப்படுதல் 1 : 1-22

II. கர்த்தரின் கோபம்:

* கர்த்தர் ஜனங்களைத் துன்பத்திற்கு ஒப்புக்கொடுத்தல்
* கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு செவிகொடுத்ததன் பலன் 2 : 1-22

III. இரக்கத்துக்கான வேண்டுதல்

* தீர்க்கதரிசி அழுதல்
* கர்த்தரை நாடுதல் 3 : 1-66
* துன்பப்படுதல்

IV. எருசலேம் முற்றுகை:

* இஸ்ரவேலின் முந்தைய மேன்மை
* தற்போதைய துன்பநிலை 4 : 1-22
* அந்நியரை நம்பியதற்கான தண்டனை
* தேவ இரட்சிப்பு

V. மீட்புக்கான விண்ணப்பம்:

* இஸ்ரவேல் உரிமை இழத்தல்
* அவர்கள் பட்டபாடுகள் 5 : 1-22
* இரக்கத்திற்காக வேண்டுதல்

சில புள்ளி விபரங்கள்:

இந்த புத்தகத்தில் 5 அதிகாரங்களும் 154 வசனங்களும் உண்டு. தீர்க்கதரிசனங்கள் 2, கேள்விகள் 13, கட்டளைகள் 3, எச்சரிக்கைகள் 2.

26. எசேக்கியேல்

பாபிலோனின் கேபார் நதிக்கரையில் அடிமைகளோடு இருந்த நேரம் தான் எசேக்கியேலுக்கு தீர்க்கதரிசன வரம் கிடைத்தது. கி.மு.597ல் நேபுகாத்நேச்சார் ராஜா கைதிகளாகக் கொண்டு சென்றவர்களோடு எசேக்கியேலும் இருந்தார். ஏசாயா தீர்க்கதரிசிக்கு நடந்தது போலவே ஒரு தரிசனத்தின் மூலமாக எசேக்கியேலும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆசாரியனாக இருந்த எசேக்கியேல் தீர்க்கதரிசன பாரம்பரியத்தை மீறுகின்ற வகையில் தேவாலயத்தையும் ஆராதனை விதிகளையும் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார்.

இந்த புத்தகத்தின் முதல் பகுதி (1-33) தண்டனையைக் குறித்தது. யூதா மற்றும் எருசலேமின் அக்கிரமங்களையும் அவிசுவாசத்தையும் எடுத்துரைப்பதோடு அவைகளுக்குக் கடுமையான தண்டனை கிடைக்குமென்றும் அதிலிருந்து யாரும் தப்ப முடியாது என்றும் உறுதியாக தீர்க்கதரிசனம் உரைத்தார். அந்த நாள் இதோ வருகின்றது என்று மீண்டும் மீண்டும் சொல்லியிருக்கிறார்.

இப்புத்தகத்தின் இரண்டாம் பாகம் (34-48) இரட்சிப்பைக் குறித்து முழங்குகிறது. கர்த்தர் தன்னுடைய ஆட்டு மந்தையை நேரடியாக மேய்ப்பார். சிதறிப் போனவற்றை ஒன்று சேர்ப்பார். காயப்பட்டதைக் குணப்படுத்துவார். எதிரிகளையெல்லாம் முறியடித்து இஸ்ரவேலுக்கு பாதுகாப்பும் ஐசுவரியமும் கொடுப்பார். வெறுமையாக்கப்பட்ட நகரங்களில் ஜனங்கள் குடியிருப்பார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஒரு புதிய இருதயமும் பெலனும் தருகிறார். புதிய ஆலயம் ஜீவ தண்ணீரின் உறைவிடமாக இருக்கும்.

நியாயத்தீர்ப்பு, இரட்சிப்பு என்று இரண்டு பெரும் பிரிவுகளாக இப்புத்தகம் பிரிக்கப் பட்டுள்ளது. இதில் எசேக்கியேலின் தரிசனம் மிகவும் முக்கியமானது. துன்மார்க்கன் மரிப்பதில் கர்த்தருக்கு விருப்பமில்லை. அவன் பாவ வழிகளை விட்டு மனந்திரும்புவதையே கர்த்தர் விரும்புகிறார். பிள்ளைகள் செய்த தவற்றிற்காக பெற்றோர்களோ, பெற்றோர்கள் செய்த தவற்றிற்காக பிள்ளைகளோ தண்டிக்கப்பட மாட்டார்கள். ஒவ்வொருவரின் செயல்களுக்கேற்ப அவரவர்க்கு பிரதிபலன் கிடைக்கும்.

ஆசிரியர் : லேவியகோத்திர சாதோக்கியரான பூசியின் குமாரன் எசேக்கியேல்

பின்னணி : பாபிலோனில் சிறைபட்டிருந்த யூதருக்கும், எல்லா இடங்களிலுள்ள வேதமக்களுக்கும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

காலம் : சுமார் கி.மு. 571

முக்கிய மனிதர்கள் : எசேக்கியேல், இஸ்ரவேல் தலைவர்கள், எசேக்கியாவின் மனைவி, நேபுகாத்நேச்சார்

முக்கிய சொல் : எதிர்கால மகிமை

முக்கிய வசனம்:

"நான் உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து அழைத்து, உங்களைச் சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுயதேசத்திற்கு உங்களைக் கொண்டு வருவேன்.

அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள்.

உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்". எசேக். 36 : 24-26

நூல் பகுப்பு:

I. எசேக்கியேலுக்குக் கிடைத்த தேவதரிசனமும், தேவநடத்துதலும்:

அதிகாரங்கள் 1-3

1. தீர்க்கதரிசியின் அழைப்பு 1 : 1-28
2. தீர்க்கதரிசியின் கடமை 2 : 1-10
3. ஆவிக்குரிய தரிசனம் 3 : 1-27

II. யூதாவின்மேல் வரப்போகும் நியாயத்தீர்ப்பு:

அதிகாரங்கள் 4-24

4. செங்கல் 4 : 1-17

5. கூர்மையான வாள் 5 : 1-77
6. பர்வதங்களுக்கு தீர்க்கதரிசனம் 6 : 1-14
7. அழிவு நெருங்கியது 7 : 1-14
இஸ்ரவேலின் பாவங்கள் 7 : 15-27
8. தேவாலயத்தின் அருவருப்பு 8 : 1-18
9. எருசலேமில் விக்கிரகாராதனை செய்வோரின் அழிவு 9 : 1-11
10. கர்த்தரின் மகிமை தேவாலயத்தை விட்டுச் செல்லுதல் 10 : 1-22
11. தலைவர்களுக்குத் தண்டனை 11 : 1-13
அடிமைகளுக்கு வாக்குத்தத்தம் 11 : 14-25
12. முகம் மூடிய தீர்க்கதரிசி 12 : 1-16
சமீபித்திருக்கும் அடிமைத்தனம் 12 : 17-28
13. கள்ளத்தீர்க்கதரிசிகளும் இஸ்ரவேலின் மூப்பர்களும் 13 : 1-23
14. விக்கிரகாராதனைக்கு எதிராக 14 : 1-11
தனிநபர் கடமையுணர்ச்சி 14 : 12-23
15. நெருப்பிற்கிரையான திராட்சைச்செடி 15 : 1-8
